T. 822.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம் வேதசாரம்.



ஸ்ரீகாசிவாசி சாம்பவஸ்ரீ

செந்திநாதையரவர்களால்

இயற்றப்பெற்று,

உபந்நியாசவாயிலாகவும் பத்திரிகைகள்வாயிலாகவும்

சைவசித்தாந்த சமயப்பிரசாரணஞ்செய்து

வராநின்ற

சைவசித்தாந்த மகாசமாஜத்தார்

விருப்பத்திற் கிணங்க,

மஹாவித்வான் புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கரும் தமிழ்ப்பண்டிதருமாகிய

புரசை-சுந்தரமுதலியாரவர்கள் குமாரர்

சி. ஏகாம்பரமுதலியாருடைய மனைவியாரும்

ஷை. சமாஜத்தின் வனிதையர் வகுப்புக் காரியதரிசியுமாகிய

ஆண்டாளம்மையெனப் பெயரிய

மங்கையர்க்கரசியாரால்

சென்னை

சைவவித்தியானுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிங்கள (வரு) சித்திரைமீ (1917 April)

[ரிஜிஸ்ட்டர்டு காப்பிரைட்.]



நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை யிருக்கு
மிடந் தெரிவித்தருளிய திருநாரையூர்ப்
பொல்லாப்பிள்ளையார்.

Solden & Co., Printers, Madras S.E.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொல்லாப்பிள்ளையார் தோத்திரம்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

கார்முது கொன்றையன் கங்கை கொண்கன்
பார்முது காறப் பாரத முடித்த
முண்டகக் கண்ணனு முண்டகக் கண்ணனும்
பண்டகத் திற்றம் பான்மை பெரிதென
வுள்ளி யடிமுடி யுறுதுமென் றளவி
னெள்ளிட லாகு மிரண்டுரு வங்க
டென்ன வொறுத்த தூமணிச் சோதியன்
கன்ன லஞ்சிலைக் காமற் காய்ந்த
பால லோசனன் பசுபதி பரம
னல போசன னருளிய செல்வன்
கல்லாப் புல்லர் காணப் பாஞ்சுடர்
பொல்லாப் பிள்ளை புனிதவத் துவித
வத்து தந்தி வத்திரன் முத்தி
வித்து ஞான வித்தகன் வருமிடை
யூற்றின் கடவு ளொற்றைக் கொம்பன்
மாற்றின் றுயர்ந்த மதிக்கோணப் பொன்னடி
சேக்குமென் னெஞ்சிற் றிருவரு ளென்றும்
பூக்கு மாங்கே புலமணங் கொளவே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.


இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடிபெண் கொடியாக
வெழுவித் தோனைத், திருவருளாற் பாலருந்தி யேடதனே யாற்றிலிட்ட
தெய்வக் கோவை, யருமறையின் றலைக்கொழுந்தை யாகமத்தின் றனிமு
தலே யடியார் வாழ்வைப், பரசமய கோளரியைக் கவுணியர்கு ளாமணியைப்
பகரு வாமே.

திருநாவுக்கரசுநாயனார்.

இடையருப் போன்பு மழைவாரு மிணைவிழியு முழவா ரத்தின்
படையருத் திருக்காமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே பதித்த நெஞ்சு
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையருச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட வுவனேக்
கொண்டே, யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள
னெல்லா மூய்யப், பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
போருளின் பெருமா ளென்றுங், திருமணக்கோ லப்பெருமாண் மறைப்
பெருமா ளெமதுகுல தெய்வ மாமால்.



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருவணக்கம்.



நிலமண்டிலவாசிரியப்பா.

பொன்னுர் மேனியன் பின்னுர் சடையினன்
பற்கநா மத்த னற்கரு ணைக்கட
லீந்த நிகமமு மாய்ந்ததந் திரமு
நன்னயத் தமிழுடைப் பன்னிரு முறையுங்
கசடறக் கல்லா வசடரை யிடித்துப்
படிவுறப் புரிமார் கடிவுறப் பன்னூ
லோய்வின் றெழுதுஞ் சாய்வி லருளின
ஞானமொன் றில்லா ஞான நீர
னம்புயத் தார்கொள் செம்புயத் தண்ணல்
வரமா விட்ட புரமா மூரினன்
நந்தங் குருமணி செந்தீநா தைய
னற்றுட் டுணையே பற்றுக் கோடும்
பரவுதும் பணிகுதும் விரவுது முளத்தே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருந்துதிக்கு மாழியிடை முன்வருநஞ் சஞ்சினரா யமரர் யாரு
மருந்துதிக்கு நீயெனவஃ தருந்துபிரான் செவிசாய்க்கு மடிக்கு நால்வ
ரிருந்துதிக்கு மாலெலிக்கு நஞ்செந்தீ நாததரு வாசை யால்யாங்
கருந்துதிக்கு மூளமிரங்கி யேற்றருளிக் கருணைமிகத் தழைக்கு மாலோ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.

சூரியனார்கோயில்

அதிவருணச்சிரம ஆசாரியவரிய சைவசமய பரிபாலக

ஸ்ரீ சிவாக்கிர யோகீந்திர ஞானசிவாசாரிய

சுவாமிகளாதீனத்து

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்கள் அருளியது.

தேவருள் தேவதேவனுகிய பரமசிவன் மேலாயினனென்பது வேதாகமபுராணேதிகாசங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல, அவனை வழிபடுதற்கு நிலைக்களமான சமயமும் ஏனைச்சமயங்களுக் கெல்லாம் மேலானதென்பது அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்ததே யாம்.

உயிர்கள் நன்னெறியொழுகி வீடுபேறடைதற்குரிய நூல்கள் வேதாகமங்களேயாயினும், அவைதாம் அளவிலவாகலின் முழுவ தும் உணர்ந்து மெய்ப்பொருள் தெரிந்து வீடுபேறடைதல் முற் செய்தவப்பேற்றுற் சிவனுது திருவருள்பெற்றார்க் கன்றி ஏனை யோர்க்கு ஒல்லாதாகும்; ஆகலின் பரதகண்டத்திலே சைவசமயப் பிரவேசகராய் உமாசமேத பரமேசுவர பாதாரவிந்தத்தில் மெய்ய ன்புடையராகிய நன்மக்கள் ஓதி யுணர்ந்து நற்கதியடைதற்பொரு ட்டு எழுந்த நூல்கள் **வேதசாரம்** எனப்படும் **தேவார** முதலிய **திருமுறைகளே**யாம்.

இத்திருமுறைகளின் மகத்துவம் அருள்வடிவாகிய உண்மை நாயன்மார் திருவாக்கினின்றும் திருப்பாசுரம் எழுந்தமாத்திரத் தில் அந்நாயன்மார் உலகோபகாரமாகக் கருதியவாறு எலும்பு பெண்ணுகச்செய்தல் முதலிய அநுக்கிரக கிருத்தியங்களைச் செய் தருளிய சிவபெருமானே அறியுந் தரத்ததன்றிப் பிரமாதி தேவ ராலும் அறியும் பான்மைத்தன்று.

இவ்வியல்பினவாய தமிழ்வேதங்கள் ஆரியவேதங்கள் மேலாலச் சிவபெருமானுடைய தடஸ்த சொரூப விலக்கணங்களையும் விபூதி உருத்திராக்ஷமகிமைகளையும் பிரணவம் பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களையும் சரியை கிரியை யோக ஞானங்களையும் அன்புநெறியையும் இன்னோரன்ன பலவற்றையும் விரித்துக் கூறுவனவாம்.

எசுர் சாகையினரும் காசிபகோத்திரத்தினரும் ஆபத்தம்ப சூத்திரத்தினருமாகிய நமது சேந்திநாதையர் அவர்கள் இருமொழி வேதங்களினும் அங்ஙனம் பரந்துகிடந்த வாக்கியங்களைப் பொருளொருமைப்பட எடுத்துத் தொகுத்து, "தேவாரம் வேதசாரம்" எனப்பெயரிட்டு வடமொழிவல்லுநரேயன்றி ஏனையோரும் அறிந்துகொள்ளுமாறு இந்நூலை இயற்றினார்கள். இவர்கள் தமிழ்மொழி வல்லோர் கற்றறிந்துகளிக்குமாறு ஸ்ரீகண்டபாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரகடனஞ்செய்தும், வடமொழியுதாரணங்களுடன் சிவஞானபோதவசனாலங்காரதீபத்தை எழுதி வெளிப்படுத்தியும், சைவஸ்தாபன நூல்களைச் சதாகாலமும் ஆராய்ச்சிசெய்து பரமதநிராகரணஞ் செய்தும் தமதுகாலமுழுவதையும் சைவசமயாபிவிருத்தியின் பொருட்டே உபயோகப்படுத்திவருகின்றார்கள்.

இவர்களியற்றிய சிவஞானபோதவசனாலங்காரதீபம் தேவாரம் வேதசாரம் என்னும் நூல்களை அச்சிட்டுப் பிரகடனஞ் செய்ய முன்வந்த சிரஞ்சீவி ஏகாம்பரமுதலியார் மங்கையர்க்கரசியார் என்பவர்கள் அரோகதிடகாத்திரராயிருந்து இவ்வியல்பினவாகிய சிவபுண்ணியங்களை மேன்மேலும் செய்து புத்திரமுத்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.



"சிவனெடோக்குந் தெய்வந் தேடினு மில்லை
அவனெடோப் பாரிங் கியாவரு மில்லை
புவனங்க டந்தன்று பொன்னெளி மின்னுந்
தவளச்ச டைமுடித் தாமரை யானே."

என்று திராவிட சுருதிமுதலியன கிளந்தோதாதப்பெறாஉம் ஒப்பி யியாகிய அநாதிமுத்தபதியெனப்படுஞ் சிவபெருமான் அநாதி பெத்தபசுக்களாகிய ஆண்மாக்கள்பொருட்டு இகபரசாதனங்கட் கேதுவாக அருளிச்செய்த முதனூல்கள் சாமானியசுருதியெனப் படும் இருக்காதிவேதங்களும், பிரபலசுருதியெனப்படும் காமிகாதி ஆகமங்களுமாம். ஏனையநூல்கள் இவற்றினின்று விரிந்தனவாம். அது, "வேதநூல் சைவநூ லென்றிரண்டேநூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்" என்னுந் திராவிட சுருதியானு முணர்க. சாமானியம் பிரபலம் என்பன முறையே பொது, சிறப்பு என்னும் பொருள்களைத் தந்து நின்றன.

உலகர்பொருட்டு அருளிச்செய்யப்பட்டமையின் வேதம் பொதுநூல் எனவும், சத்திநிபாதர்பொருட்டு அருளிச்செய்யப் பட்டமையின் ஆகமம் சிறப்புநூல் எனவும் கொள்ளப்படும். இது னை, "ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா, நீதியினு னுல கர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது" என்னுந் திராவிட சுரு தியானுணர்க.

இனிமற்றொன்று:—அக்கினி இந்திரன் வருணன் முதலிய கடவுளர் உபாசனைகளும் இருக்குமுதலிய சுருதிகளில் மிகுத்துக் கூறப்படினும், அக்கினி முதலிய நாமங்கள் மகாருத்திரராகிய சிவ பிரானது திருநாமங்களாம் என்றும், சிவபெருமானே (தத்துவா தீத) பரமவியோம அத்தியக்ஷர் என்றும், எல்லாத் தேவர்கட்கும் முற்பட்டவர் என்றும், அவரை இதயத்தில் உபாசிப்பவனே அன் னத்தை நாவினுற் கிரகிக்கின்றவன் என்றும் அச்சுருதிகளே

சித்தாந்தஞ் செய்து போதரலின் அவற்றைச் சிறப்புநூல்கள் என லாமோ எனின், ஆகாது; யாதினுலெனின், அவ்வக்கினி முதலி யோரையும் ஒருங்குகூறிப் போதலானென்க. ஆகலான் அத்துணை பற்றி அவைபொதுநூல்களே எனவும், காமிகாதி சுருதிகள் அங் ஙனமின்றிச் சிவபிரான் ஒருவரையே கூறிப்போதலின் சிறப் புநூல்களே எனவும் கொள்ளப்படும்.

காமிகாதி சுருதிகள் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கட வுளர் வழிபாடுகளும் மிகுத்துக் கூறிப்போதலின் அவைகளும் பொது நூல்கள் எனப்படாவோ எனின், சிவபிரான் அடியார்க்க னுக்கிரகஞ் செய்யும்பொருட்டு அவ்வப்போழ்து கொண்டருளிய மூர்த்தங்களே விநாயகமூர்த்த முதலியன ஆகலான் அதுகடாவன் றென விடுக்க.

உலகர்களாகிய அபக்குவ ஆன்மாக்கள் சோபானமுறையானே கீழ்க்கீழ்ச் சமயங்களைப் பற்றி அவ்வச் சமயக்கடவுளரை வழிபட்டு மேன்மேற் சமயங்களில்வந்து, ஈற்றில் "இராசாங்கத்தமர்ந்த வை திகசைவத்தைத் தலைப்பட்டு அச்சமயக்கடவுளாகிய சிவபிரானை ஆகமத்திற்கூறிய சரியை கிரியை யோக ஞானங்களாலே வழிபட்டு முறையே சாலோக சாமீப சாரூபமாகிய பதமுத்திகளையும் சாயுச் சியமாகிய பரமுத்தியையும் அடைவர்.

மேற்கூறிய படிமுறையாற்றானே பரமுத்தியைத் தலைப்படல் வேண்டுமென்பதும், சைவசமயமே மெய்ச்சமயம் என்பதும்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்துமருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித் துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர் வர்" எனவும்,

"சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
ருவி யருதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற" எனவும்

வரும் திராவிடசுருதிகளானறிக.

உ

இக்கருத்துப்பற்றியேதாயுமானசுவாமிகளும்,

சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்னுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்தழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதரும்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்றருளிச் செய்ததுமெண்க.

இருந்தவாற்றால் வேதத்துள் ஏனைத்தேவர்கட்குத் தலைமை கூறப்பட்டது பக்குவத்திற்கேற்ப ஆன்மாக்கள் ஒவ்வொருவரைத் தத்தமக்குக் கடவுளாகக்கொண்டு சமுத்திர கலச நியாயமாக ஒவ்வொரு மதம் உண்டாக்கி அவ்வவற்றைக் கடைப்பிடித் தொழுகுதற் பொருட்டென்பதாமும், அவ்வொழுக்கத்திற் கேதுவாய மதங்கள் அவ்வான்மாக்கள் சோபானமுறையானே மேன்மேற் சேறற்குக்காரணம் என்பதாமும் பெறப்பட்டவாறு காண்க. "அருமறையாகம முதனூலனைத்து முரைக்கையினு னைப்பரிதா மப்பொருளா யானருளாலணுக்கள்—தருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்றர்க்க மொடுத்தங்களினுற் சமயஞ்சாதித்து" என்னுங் கருதியானும் அது பொள்ளெனப்புலப்படும்.

அவர் தலைமை இத்திணைப் பயன்படன் மாத்திரைக்கேயன்றிப் பரமுத்திக்குக் காரணமாகக் கூறப்பட்டதன்று. அதற்குக் காரணம் மகாசங்கார காரணராகிய சிவபிரான் வழிபாடே என்றுணர்க; அது,

"பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கே றெய்தி வீடுபே றடைது மென்றல்
உருவமில் விசும்பிற் ரூலி யுரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ.

காரெழில் புரையு மேனிக் கண்ணனே யென்னைப் பின்னை
யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்த தேபோல்
ஒருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகம னென்றே
பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே.

தான்மறை தனிலோர் பாக நாரமார் கடவுட் சென்னி
மேன்மைய தியம்பு மெம்மை விண்ணவர் தம்மை யேனைப்
பான்மைகொள் பூதத் தன்னைப் பல்பொரு டனையும் பாதி
தான்மொழிந் திமமா மீது சவறல வுணர்தி சக்கோய்.

நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொ ணெஞ்சர் தீரா விழுமவெங் நிரயம் வீழ்வர்
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்கள்
எம்மையுந் துயர மென்னு மிருங்கடற் படிப்ப ரன்றே.

காணுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்பர்
ஆனவ ரென்று மன்னுற் கடித்தொழில் புரிந்து வாழும்
வானவ ரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வோ மல்லா
வீணையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே யிருத்தும் யாமே.

பதியரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுநா மென்றே
விதியொடு மறைகள் கூறு மெய்மையைத் தெளிய வேண்டின்
இதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வர சியற்ற வீசன்
அதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவுங் காண்டி.

அவனருள் பெருது முத்தி யடைந்தன ரில்லை யல்லால்
அவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
அவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யாணை
அவனல திறைவ னில்லை யவனீ யடைதி யென்றான்."

எனப் பிரமா தக்கனுக்கு உபதேசித்த பொருளையுடைய உபப்பிரு ங்கணத்தானு மறிக.

வேதத்துள் மற்றத் தேவர்களோடு சேர்த்துப் பொதுவாகக் கூறப்பட்ட சிவபிரான் தலைமையைத் தேவார முதலிய திருமுறை கள் ஆன்மாக்கள் பரமுத்தி யெய்துமாறு அவரைவழிபடற்பொரு ட்டுச் சிறப்பாக எடுத்துக் கூறிப் போதரும் வனப்பு மிகுதிப்பாட் டின்மேலும், சிவாகமங்களுட் கூறியவாறே வேதத்துள்ளும் கூறப் படும் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் என்பன வற்றையும், சிவபிரானே மகாப்பிரளயகாலத்தும் அழியாதிருப்பவர், ஆன்மாக் களுக்குத் தலைவர் என்றற்றொடக்கத்த மகாவிசேட விஷயங்க ளையும் ஆங்காங்கு மிகத்தெளிவுறக் கூறிப்போதரும்நனிமிகு மகத் துவம் வாய்ந்தன. இவ்வுண்மையை,

வடமொழி தென்மொழிகளில் வல்லுநராய், அவற்றொடாங் கிலமும் பயின்று, சுவமத ஸ்தாபனமும் புறமத நிராகரணமும் செய்து சைவ சமயத்தைப் பரப்புதற் பொருட்டும் தமிழ்க்கல்வி யை விளக்குதற் பொருட்டும் உடல் பொருள் ஆவி மூன்றினையும் அவற்றின் பொருட்டுத் தத்தஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர வர்கள்போல. இருமொழியினும் வல்லுநராய், ஆங்கிலமும் பயி

ன்று சுவமதஸ்தாபனமும் புறமத நிராகரணமும் செய்தலிற்றூனே தங்காலம் கருத்து முதலியவற்றைப் போக்குகின்ற காசிவாசி ஸ்ரீ ல ஸ்ரீ சேந்திநாதையரவர்கள் நன்கிதினுணர்ந்து, உணர்ந்த மாத்திரையி னமையாது, அதனை வடமொழி உணராத் தென் மொழி யாளர்க்கும் தென்மொழி உணரா வடமொழியாளர்க்கும் இருமொழிப் பிரமாணங்களாலும் தெரிக்க விரும்பி, அங்ஙனந் தெரிக்கு முகத்தானே சிவபிரானே எப்பொருட்குமிறைவனென் பதை, வாயுமுகத் தசையாத வச்சிரமலைபோலவும் அக்கினி முகத் தழியாத தங்கம்போலவும் நனிதவ நிறுவி "தேவாரம்வேதசா ரம்" எனப்பெயரிய நூலொன்று இயற்றினர்கள். அதனை,

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்னுஞ் சுருதிப்படி சிவஞானபோத வசனாலங்கார தீபமூத லியவற்றை அச்சிடுவித்து உலோகோபகாரமாகப் பரப்பிய புண் ணியமூடையர்களும், சைவசித்தாந்தமகா சமாசத்திற்சேர்ந்து, பொதுநயங்கருதிப் பலப்பல சற்கருமங்கள் செய்து வருபவர்களு மாகியம-ள-ள-ஸ்ரீ ஏகாம்பரமுதலியாரவர்களும் அவர்கள் மனைவியா ராகியமங்கையர்க்கரசியாரும் அச்சிடுவித்துப் பரப்பி முன்போலப் புண்ணியம்புகழ் முதலியவற்றைப் பெறுவாராயினர்.

இத்தகைய சிவபுண்ணியாபிவிருத்திக்குரிய செயல்களைச் செய்து போதராநின்ற இத்தம்பதிகள் இன்னும் இவைபோன்ற பெருஞ் செயல்களைச் செய்து, "நாம்பெற்ற வின்பம் பெறுக விவ் வையகம்" என்றபடி தாம்பெற்ற வின்பம் உலகம் பெற்றின்புறு மாறு பெருவாழ்வடைந்து நீடுவாழும்படி பரங்கருணைத் தடங் கடலாகிய பசுபதிப் பெயரிய ஒருதனி முதல்வர் பேரருள் பாலிக் குமண்ணம் அவர் திருவடிக்கமல முடிமிசைக் கொண்டு நனி பழிச்சுதும்.

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

சிவமயம்.

பத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.



உலகுதனிற் பலவகைய சமயங்க ளுளவவற்று ளுயர்வொப் பின்றி
யிலகுமொரு சைவமத வுண்மையினை யாவருமிங் கினிதி னுணர
விலகிமல மொதுங்கவரு டருஞான சபையினிடை மேல தாகு
மலகிலொளிப் பொருள்காட்டுந் தில்லையெனும் பெரும்பதியு மமர்தலா னும்

ஈசனமர் தருங்காசி முதலியவா லயங்களெல்லா மிலங்க லானும்
பாசவிமோ சனமருளுங் கங்கைமுதற் றீர்த்தமெலாம் பயிற லானு
மாசகல்சுத் தாத்துவித சித்தாந்த சைவநெறி மருவு ஞான
தேசிகர்பற் பலர்வந்து திருவவதா ரம்புரிந்த செய்கை யானும். உ

மெய்ம்மைநெறி புகல்வேத வாகமமா தியநூல்கள் விளங்க லானுந்
தெய்வமுனி வர்களிருந்து தவம்புரிதற் கிடமாகித் திகழ்த லானு
மூய்யுநெறி கருதியம ருலகினரும் வந்தரனை யுவந்து பூசை
செய்யுமொரு திறத்தாலும் பரதகண்ட மூலகினிடைச் சிறந்துற் றன்றே.

அப்பரத கண்டத்திற் றென்னுட்டி லவதரித்தா ரகில மூய்ய
வொப்பில்சிர புராத்தலைவர் வாகீசர் சுந்தரரென் றோது மூவர்
அப்பெரியோர் மூவர்களு மரணமரா லயங்களொறு மடைந்தே யன்பிற்
செப்பினர்க டேவார மருமறைநூ லிதுவென்று செகத்தோர் கொள்ள. ச

எலும்பினைப்பெண் ணுருவர்க வியற்றியது கற்புணையா விருளார் பௌவஞ்
செலுப்படிசெய் திட்டதுமு னுண்டமறைப் பாலகனைச் சினவி டங்கர்
சலம்புலரு மோடையினீ ருடனடைந்து தரப்புரிந்த சால்பிற் றின்னுஞ்
சொலும்பரிசோ தேவாரஞ் செய்தபெரு மற்புதங்க டுணையிற் றன்றால். ஞ

அன்னதொரு தேவார மறைப்பொருளைத் தன்னகத்து ளடக்கி நின்ற
தென்னுமதை யினிதுணரச் சுருதியுறும் வாக்கியங்க ளெடுத்துக் காட்டிப்
பன்னுபுரா ணுதிகளின் வாக்கியமு மவற்றினுடும் பயிலக் கூட்டி
நன்னயநூ றேவாரம் வேதசா ரப்பெயரி னல்கி னனால். ட

யாவர்களு மியற்றரிய விப்பனுவல் செய்தளித்தோன் யாவ னென்னிற்
றேவர்களுக் கரியானைத் தேவாதி தேவனைத்தன் சிந்தை யுள்ளே
பாவனைசெய் தளவில்பர மானந்த வாரிதியிற் படிந்து நின்றோன்
முவகைய பாவனையுங் கடந்தசுத்த வித்தமென்று முடிவு செய்தோன். எ

நாட்டியுயர் சித்தாந்த தத்துவத்தின் மூடிபுதலை ஞாலத் தோர்க்குக்
காட்டவோரு படமுமத னியலுணர்த்த வினுவிடையுங் கருதிச் செய்தோ
னீட்டுபுக முடைவாத ராயணர்சூத் திரத்தினுக்கு நீலகண்டர் [டோன்.
தீட்டியபா டியந்தமிழிற்பெயர்த்தெழுதா வெழுத்தினிடைச் சிறப்பக் கண்

சிவஞான போதமெனுஞ் சித்தாந்த முதனூற்குச் சிவஞா னப்போர்த்
தவஞான முனிவர்தரு முரையதனைத் தழுவியொரு தகுதி யார்தத்
துவஞான முறுவசன வலங்கார தீபமொன்று தலங்கத் தந்தோ
னவஞானந் தருமாயா வாதிகளாங் கயத்திரளை யடக்குஞ் சிங்கம். கூ

வேதமுட னுகமங்கண் மிருதிமுதற் கலைகளெலா மிகவு மாய்ந்தோன்
காதலொடுந் தண்டமிழிற் சித்தாந்த சாத்திரத்தின் கரையுங் கண்டோ
னேதமுறும் பரசமயப் படுகுழியீ முலகோரை யெடுத்துச் சைவ
போதமா நெறிவிடுக்கும் பிரசங்க சாதுரியம் பொருந்துஞ் செல்வன். கo

திருமருவுஞ் சூரியனூர் கோயிலா தீனமிகச் சிறப்ப வைகுங்
குருபரபில் வருமுத்துக் குமாரகுரு வெனும்போர்கொள் குரவ னீந்த[ர்சங்கந்
பெருமைகொளுஞ் சித்தாந்த சிகாமணிப்பேரொடுஞ்சென் னெப் பெரியோ
தருமொருபேர் கிறீஸ்துமத கானகோ டரியென்று தழைக்க நின்றோன்.

சத்தினுடன் சதசத்து மசத்து மெனும் பொருணிலைமை தனையிங்காயு,
முத்தமர்கட் கொருகுருவா யவற்றினியல் புணர்த்திடுவோ ளெழுக்கம் பூ
ண்டோன், சுத்துபுனற் கடலுலகில் வைத்திலகும் புகழாளன் காசி வாசி,
பத்திநெறி யுறுஞ்சேந்தி நாதமறை யவனென்று பகர்வோ னன்றே. கஉ

உலகமெலா மிருபுகழ்பெற் றோங்குசைவ சித்தாந்த மகாச மாசத்
திலகமென விளங்குமங்க சிரத்தையினர் சிவசமய விருத்தி செய்யப்
பலகலைகள் பலகறவே பார்த்தச்சிற் பதிப்பித்துப் பலர்க்கு நல்கிக்
கலகமிலாப் புலவோர்கள் களிசிறப்பக் கண்டுநனி தாங்க ளிப்போர். கங

இத்தகையே காம்பரணு மிவன்மனமங் கையர்க்கரசி யென்ன வாழும்
புத்தியுறு மாதுமிகப் புகழ்தேவா ரம்வேத சார மென்னும்
மெய்த்தகைய நூறன்னே மேதினியோர் பயனெய்த விருப்பமுற்றுச்
சித்தமொரு மித்துநனி சிறந்தவச்சிற் றீட்டியுப காரித்தார் தேர்மின். கச

இங்ஙனம்,

சி. கணேசையர்

புன்னைமாநகரம்

யாழ்ப்பாணம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விசேஷவிஞ்ஞாபனம்.

சைவத்தின் மேற்சம யம்வே றிலேயதிற் சார்சிவமாங் [வாய்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்போற் றாளெம் முயிர்த்துணையே.

சைவ நன்னெறியார் மெய்யறிவுடையீர்!

அநாதிமலமுத்தனுகிய மனுதிகடந்த தனிப்பெருங்கருணை வள்ளலார், எத்திறத்துயிர்களும் தம்மையுந் தந்தலைவனையுங் காணுவாறு, ஆணவ வல் லிருளுட்பட்டிருத்தலின், புறவிருளிற் புக்கார்க்குக் கைவிளக்குதவுதல்போல வேதசிவாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளினரென்ப. அவற்றுள் வேதம் சூத்திரம் போன்றிருத்தலிற் பொதுநூல் எனவும், ஆகமம் அதற்குப் பாஷ் யம் போன்றிருத்தலிற் சிறப்புநூலெனவும் பெற்று ஒருபொருளுடையனவே யாம். தருக்கவியாகரணதி கருவிநூல்களைக் கடைபோகக்கற்று வேதசி வாகமங்களின் பொருளை யறுதியிட்டறிவது அரிதாயினமையின், அவற் றிற்கு அபார்த்தங்கூறி இடர்ப்பட்டு மலைந்தனராக, அருட்பெருங்கடலா கிய ஆலமர்கடவுள் அவற்றின் பொருளையினிது விளக்கிச் சைவசம யத்தை நிலைபெறுத்தற்கு ஸ்ரீகைலாசத்திருந்த ஸ்கந்தாதியரை அடுத்தடுத் துத் திருவவதாரஞ் செய்யுமாறு பணித்தனர். அவர்கள் ஸ்ரீஞானசம்பந்தாதி ஆசாரியர்களாகத் திருவவதாரஞ்செய்து வேதசிவாகமங்களை வடித்துச்சாரங் கொண்ட தெவிட்டாத தெள்ளமுதத்தைத் தமிழாகிய மாணிக்கச் செப்பி னிட்டு அருளினரென்க. இவ்வுண்மை தமிழ்வேதம் என்னும் பெயரானே அறியக்கிடப்பினும், சில்வழிப்பெயருக்கும் பொருட்கும் இயைபின்றிக்தரு ட்டுக் கண்ணனைச் செந்தாமரைக்கண்ணன் என்று பெயர் வழங்கக் காண் டலின், இஃதங்ஙனமன்றெனப் பெயரோடு பொருளும் பொருத்தமாமாறு விளக்குதலாவசியகமாயிற்றென்க. அதுகண்டு யாம் இருமொழி வல்லுநரா ய்ச் சைவசமய நூலாராய்ச்சியிற் றலைநின்ற சாம்பவஸ்ரீ **காசிவாசி செந்தி நாயைவர்கள்** **'தேவாரம் வேதசாரம்'** என்னும் மாட்சிமைதங்கிய நூல்வரைந்து வைத்திருப்பதாக அறிந்து அதனை அவர்களிடத்தில் வேண் டிப் பெற்று வெளியிட்டேம். இந்நூல் சைவசமயிகட்கு இன்றியமையாத தொன்றே; ஒவ்வொரு சிவநேசச்செல்வர் கரத்திலும் இருக்கற்பால தொன்றே.

விசேஷவிஞ்ஞாபனம்.

ஷ 'தேவாரம் வேதசாரம்' என்னும் நூலின் இன்றியமையாமை கருதியும் மற்றை நூல்கள் வெளிப்படற்கு உதவியாதல் கருதியும், சைவாபிமானிகள் ஷ நூலை விலைக்குப்பெறின், சிவபுண்ணியத்தைக் கொள்ளை கொள்வரென்பது திண்ணம்.

யாம் "சிவஞானபோத வசனலங்காரதீபம்" "தேவாரம் வேதசாரம்" ஆகிய இவ்விரு பெருநூல்களை அச்சிட்டுளம். நம் சென்றகாலத்தநுபவத்தைக் கொண்டளவிடின், ஷ நூற்பிரதிகள் விலைப்படச் சிலதலைமுறைகள் செல்லுமெனத் தோன்றுகின்றது.

எமக்குப் புத்தகவியாபாரம் ஜீவனோபாயமன்றென்பதனை அறியாதாரிலர். எங்ஙனமாயினும் சைவவுலகம் வாழ்வதற்கு இன்றியமையா நூல்கள் சிலவற்றை முன்னின்று உழைத்துக் கைப்பொருளும் இயன்றவளவு செலவிட்டு அச்சேற்றி உலகிற்குதவிச் சிவபுண்ணியங் கைக்கொண்டு எடுத்த பிறப்பினைச் சபலமாக்கவேண்டுமென்பதே ஒருகாலும், இருகாலும், மூக்காலும் எமக்கு ஆசை யென்றறிக. ஆகலினன்றே, அச்சுத்தாளும் மையும் மும்மடங்கு விலைகொண்டு நிற்பது நோக்காது இந்நூல்களை ஈண்டு வெளியிடத் துணிந்ததென்க. அவ்வாசை சைவாபிமானிகள் உதவியாலன்றி ஈடேறுமாறின்றுகலின், அவர்கள் ஷ நூல்களை விலைக்குப் பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேம்.

இங்ஙனம்,

சி. ஏகாம்பரன்.

மங்கையர்க்கரசி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இந்நூலின்கணுள்ள

விஷய அகராதி அநுக்கிரமணிகை.

பக்கம்.

அகஸ்தியமகாமுனிவர்க்குப் பொதியமலை அருளப்பட்டமை ... கஉங
அடியார் விரும்பியதைச் சிவபெருமான் பிரசாதிப்பவர் ... கஙக
அந்தரியாமி ... கஉடு
அறிந்தேன் என்னும் தற்போதமுடையார்க்கு எட்டாதவர் சிவபெருமான் ... ககக
அர்ச்சுனனைக் கொல்லவந்த பன்றியை வேடவடிவம் பூண்ட சிவபிரான் கொன்று அவனுக்குப் பாசுபதம் கொடுத்தமை ... கஙஉ
அஷ்டமூர்த்தி சிவபெருமான் ... உஉ0
அஷ்டபுஷ்பம் ... கூசஎ
ஆகாயம் பூமிமுதலியவற்றுக்கு உறைவிடஞ் சிவபெருமான் ... உ0அ
ஆதித்தியன் மத்தியிலுள்ளார் சிவபெருமான் ... ககஉ
ஆன்மா முத்திதசையிலே வெளாது அபகதபாப்மத்துவாதி (சர்வஞ்ஞத்துவாதி) எண்குணங்களைச் சாமியமாக (ஒப்பாக) அடைதல் ... கூஎ0
ஆன்மாவை வியாபகமாக்குதற்குச் சிவபெருமான் வசீகரிப்பவர் ... கூஎ0
இரண்ணியகருப்பருக்கு மேலாகிய நாராயணர்க்கும் மேலானவர் சிவபிரான் ... கூக
இதயகுகையின்கண்ணே பிரவேசித்தவர் சிவபெருமான் ... கஅ
இருபற்றும் அற்றவர்க்குச் சிவபெருமான் அத்துவிதமாதல் ... கூஎசு
இருளுக்கு (அஃதாவது பிரகிருதிமண்டலத்துக்கு) மேலே சிவபெருமான் ஆதித்தியவண்ணர் எனப்படுதல் ... ககச
உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்படும் பிரஹ்மசப்தம் சிவபெருமானே உணர்த்துமெனல் ... ககசு
உமாதேவியார் சிவபெருமானுக்குச் சரீரம் ... உஎ
உருத்திராக்ஷம் ... சுசு
உற்சவம் ... கூசகூ
எண்ணிறந்த பிரமவிஷ்ணுக்கள் முதலாயினோர் ஒழிந்தகாலத்தும் சேஷித்து அழியாது நிற்பவர் சிவபெருமான் ... கஙூ
எல்லாமாயினர் என்று உடன்பாட்டுக் குணங்களாற் புகழப்படுஞ் சிவபெருமானே ஸ்தூலமன்று அணுவன்று என்றற்றொடக்கத்

தனவாக எதிர்மறைக் குணங்களாலுங் கூறப்படுதல் . உகஉ
எல்லாம் அநித்தியமாயும் தேகம் மிக இழிவுடையதாயும் உள்ளன; ஆகவின், தேகமுள்ளபோதே சிவபெருமானே வழிபட்டுய்தல் வேண்டும் நிசு
ஒருவர் தியானரூபம் எங்ஙனமோ அங்ஙனமே சிவபிரான் அந்தத் தியானவுருவாய்நின்று அருளுவர் கoஅ
கஜமுகக்கடவுள் கயமுகனைக் கொன்றமை உசுஎ
கிரியை நுஉஎ
கேட்டல் சிந்தித்தலாதிய இன்றியமையாதன நுகஉ
கேநோபநிடதத்து உமையம்மையார் (இமவான் மகளாதலின்) ஐமவதி எனப்படுதல் உஉ
கைலாசம் தூக்கமுயன்ற இராவணன் சிவனுர் பாதாங்குஷ்டத்தினுல் நசிந்து பின்னர்ச் சாமகானம்பாடி வாளும் ஆயுளும் பெற்றமை கசசு
சமுத்திரமதனத்தெழுந்த விஷத்தைச் சிவபெருமான் உண்டு கண்டம் கருநிறமுற்றமை உநஎ
சரியை நுகஙி
சிவபிரான் அருளுந் திருவருளினுல், அவர் அறியற்பாலர் நுகநு
சிவபெருமானுக்கு எண்குணமுண்மை உகசு
சிவபெருமானுக்கு ஒப்பாரும் இல்லை மிக்காரும் இல்லை கoநு
சிவபெருமானுக்குச் சோமசூரிய அக்கினி என்னும் முச்சுடரும் கண்களாதல்; திரிசூலந் தரித்தல் உகக
சிவபெருமானுக்குத் தோடுகுண்டலமுடைமை உகo
சிவபெருமானுக்குப் பிறப்பில்லாமை கசூசு
சிவபெருமானுக்குள்ள ஸ்திரமாகிய மூர்த்தங்கள்போல, உபாசகர் சிவலோகத்திற் கொள்ளும் உருவங்களும் கேடில்லாதன நுஎஙி
சிவபெருமானே வேதாகம முதலிய சமஸ்த சாஸ்திரங்களுக்கும் கர்த்தா ஈஅ
சிவபெருமானே அறிதலாற் பாசங்கள் (மலமாயாகன்மங்கள்) நீங்கும்; இதனுற் பிறவி அறும் கஙசு
சிவபெருமானே அறிபவன் அரியன் கஙஅ
சிவபெருமானை எக்காலமும் தியானித்தல்வேண்டும் கoசு
சிவபெருமானைச் சரணடைதல்வேண்டும் கoஅ
சிவபெருமான் அந்தகாசுரனைச் சூலத்தாற் கொன்றமை உசுச
சிவபெருமான் ஆண் பெண் அலியல்லாதவர் உஉக
சிவபெருமான் ஆமையோடு தரித்தமை கஎஙி
சிவபெருமான் இடபவாகனர் உசு
சிவபெருமான் உபமன்னியுவுக்குப் பால் அருளினமை உஉச
சிவபெருமான் உமாபதி எனப்படுதல் உஉ

சிவபெருமான் உலகத்தைக் கலங்காவண்ணம் தாங்குபவர் உ0கூ
சிவபெருமான் எண்ணிறந்த கண்முதலியவற்றையுடையர் உகூ0
சிவபெருமான் எல்லாநாமங்களினுலுங் கூறப்பட்டு எல்லாமாயுள்ளார் உகூஉ
சிவபெருமான் ஐயனுரைப் புதல்வராகக்கொண்டவர் கஉ0
சிவபெருமான் ஒருவரே வழிபடற்பாலர் கப்க
சிவபெருமான் கங்கைதரித்தமை கஅள
சிவபெருமான் கண்ணில் உள்ளார் ககஉ
சிவபெருமான் கருணைக்கடல் உ0எ
சிவபெருமான் காளியோடு நடனஞ்செய்து அவள்கர்வமடக்கினமை உகூடு
சிவபெருமான் கொக்கிறகு தரித்தமை உடுசு
சிவபெருமான் சந்திரனைத் தரித்தமை கஅகூ
சிவபெருமான் சாத்துவிகாதி முக்குணங்களில்லாத நிர்க்குணரும், சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய குணிப்பொருளாயுமுள்ளார் உகஅ
சிவபெருமான் சிறிதிற் சிறியர் பெரிதிற் பெரியர் உஉசு
சிவபெருமான் சோதிக்குட் சோதி உஉக
சிவபெருமான் ஞானத்தினுல் ஆன்மாவில் அறியப்படுகின்றூர் கூடு0
சிவபெருமான் ஞானப்பெருங்கடற்கு நாதர் உ0சு
சிவபெருமான் தம்மடியார்க்குத் தம்மைப்போல இன்பம் கொடுப்பவர் ககூகூ
சிவபெருமான் தருமிக்குப் பொற்கிழி கொடுத்தமை ககூ0
சிவபெருமான் திரிபுரசங்காரஞ் செய்தமை உசஉ
சிவபெருமான் தேவர்களுள்ளே பிராஹ்மணர் ககூச
சிவபெருமான் நாராயணரை ஓர் சத்தியாகத் தமது ஓர் பாகத்திற் கொண்டமை க0கூ
சிவபெருமான் நாராயணர் இதயத்திலே தியானப்பொருளாயுள்ளார் ககக
சிவபெருமான் பசுபதி உஎ
சிவபெருமான் பன்றிக்கொம்பு தரித்தமை கஉஉ
சிவபெருமான் பாணபத்திரர்க்குப் (பலசை) அருளினமை கஙக
சிவபெருமான் பிரமாதிதேவர்களுடைய சுடலைப்பொடி சிரோரோமம் தலையோடுகள் என்புமாலை என்பவற்றைத் தரிப்பவர்; பிசாசுகளும் பூதங்களுஞ் சூழ நடனஞ்செய்பவர் கடுள
சிவபெருமான் பிருதிவிமுதலிய ஐம்பூத தத்துவ குணங்களாய்நிற்கின்றூர் உஉஉ
சிவபெருமான் புலித்தோல், பரசு (மழு), மான், சர்ப்பம், பூதம், மூண்டதலை, அபஸ்மாரம் என்பவற்றையுடையர் ககூடு
சிவபெருமான் பொன்வண்ணர் ககடு
சிவபெருமான் மன்மதனைத் தகித்தமை ககஅ
சிவபெருமான் மிகுதண்ணுணர்வாயுள்ளார் உஉக

சிவபெருமான் முதல் இறுதியில்லாதவர் ஙகஎ
சிவபெருமான் யாகாதிபதி கூஉ
சிவபெருமான் யானைத்தோல் போர்த்தமை உஙிஎ
சிவபெருமான் வாமனவதார திரிவிக்கிரமர் கங்காளர் தரித்தமை களஎ
சிவலிங்கபூசை கூசஅ
சிவனடியார்களை நிந்திப்போர்க்குத் தண்டம் சேர்தல் ஙகஙி
சிவான்மம், பரமான்மாவாகிய இருபாகுதிகள் ஙக
சூரனைச் சுப்பிரமணியர் கொன்றமை உகூஙூ
ஜலந்தாசுரனைச் சிவபெருமான் கொன்றமை உறிஏ
ஞானம் கூஎக
ஞானயோகிகள் சிவலோகஞ் செல்லும் நெறி நூஎகூ
தகூபஞ்ஞ சங்காரம் உஅசு
திருச்சிற்றம்பலவர் தரிசனத்தினல் நோயெல்லாம் நீங்கும் கூகஅ
துர்ப்பிக்ஷமுதலிய கலிநீங்கும்பொருட்டு வேள்விக்குரிய அக்கினியின் சுர்மாங்கமாகிய ஸ்தூலோபாசனையும், பாவமூலமாகிய பாசநீங்குதற்பொருட்டுத் திருச்சிற்றம்பலவரது ஞானத்துக்குரிய சூக்குமோபாசனையும் ஒருங்கு அநுஷ்டிக்கற்பாலன. கூச
பஞ்சசவ்வியம் கூசள
பஞ்சகிருத்தியஞ் செய்பவர் சிவபெருமான் ஙிஉ
பஞ்சாக்ஷரம் களூ
பிரணவம் எசு
பிரமவிஷ்ணுக்கள்சிவபெருமானுடைய அடிமுடிகளைத் தேடப் போந்தமை ஙகஙூ
பிரமவிஷ்ணு உருத்திரர்களுக்குத் தலைவர் சிவபெருமான் உ0
பிரமாவின் சிரசைக் கொய்தமை உஎடி
போகத்துக்குரிய பொருள்கள் அநித்தியம் ஙிடி
மகாப்பிரளயகாலத்திற் சிவபெருமான் ஒருவரே உளராயினர் கஉ
மணம் வாக்குக்கு எட்டாத சிவபெருமானை அறிந்தவன் யாண்டும் அஞ்சான் ஙகூஉ
மார்க்கண்டேயர் சிவபூசைசெய்துயமனைச் செயித்தமை களக
மூன்று கண்களையுடையர் சிவபெரு மான் உக0
யோகம் கூடிஉ
விபூதி சுஙக
விஷ்ணு ஆயிரம் கமலங்களாற் சிவபெருமானைப் பூசித்துச் சக்கரம் பெற்றமை கடிச
வேதத்தினுட்பொருள் சிவபெருமான் ஙி0
வைசுவாநரவுபாசனையிற் பரப்பிரமசிவனுக்கு ஆகாயவியாபகம் உபசங்கரிக்கபபட்டாற் போல அவரது மகாவீரியச் செய்கைகளும் உபசங்கரிக்கற்பாலன கூ0டி
வைசுவாநரான்மா சிவபெருமான் உஙக
வைரவர் இரத்தபிக்ஷை யேற்றமை உஅ0

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உபோற்காதம்



உமாசமேதராய், அதிபரமாப்தராய், அபகதபாப்மத்துவாதி (சர்வஜ்ஞதாதி) எண்குணங்களையுடையராயுள்ள சிவபெருமான் ஆன்மாக்கள்பொருட்டு அருளிச்செய்த முதனூல் வேதம். இந்த வேதம் என்னும் மொழி ரூடப்பெயரால் இருக்காதி வேதங்களையும், யோகப்பெயராற் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும் உணர்த்தும்; ஆகமம் என்னும் மொழியும் ரூடப்பெயராற் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும், யோகப்பெயரால் இருக்காதி நான்கு வேதங்களையும் உணர்த்தும். சிக்ஷாமுதலிய அங்கங்கள் ஆறும், ஸ்மிருதிமுதலிய உபாங்கங்கள் நான்கும், தனுர்வேதமுதலிய உபவேதங்கள் நான்குமாகிய பதினென்கும் வேதத்தினும், உபாகமங்கள் இருநூற்றேழும் ஆகமப்பிரகரணங்களும் ஆகமத்தினும் அடங்கும். இந்த வேதமும் சிவாகமமும் பொருளினால் ஒற்றுமையுடையனவாம். ஸ்ரீநீலகண்டசிவாசாரிய சுவாமிகளும் "வேதசிவாகமங்கட்குப் பேதம் கண்டிலம்" என்று பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்தில் (உ. உ. சூஅ) வரைந்தருளினர்கள்.

சாந்தோக்கியோபநிடதத்து எ. க. உ–ம் மந்திரத்தில் "இதிகாசபுராணமானது வேதம் என்று கூறப்படலானும், வாயுசங்கிதை பூருவபாகத்து உஅ–ம் அத்தியாயத்து சூ, சூ, க0–ம் சுலோகங்களிலே வேதத்துக்கு இதிகாசபுராணங்கள் உபப்பிருங்கணங்கள் என்று கூறப்படலானும், வேதாகம இதிகாசபுராணங்கள் வேதம் என்னும் மொழியினாற் கூறப்படுதற்குமுரியன.

ஆன்மா பாசபடலம் நீங்கிச் சிவனுரது அபகதபாப்மத்து வாதி (சர்வஞ்ஞதாதி) எண்குணங்களைச் சாமியமாய் அடைதலே மோக்ஷலட்சுமிப்பிரயோஜனமாம் என்று தியானயோகம்பற்றி வேதாந்தம் கூறலானும், சர்வஞ்ஞதாதி எண்குணங்களையும் சாமியமாய் அடைதலே நெறியாம் என்று ஞானயோகம்பற்றி ஆகமாந்தம் கூறலானும், வேதாந்தமும் ஆகமாந்தமும் (வேதாந்த சித்தாந்த) மகாவாக்கிய பரமசிவாஹம்பாவனைத் தடஸ்தசிதம்பர துரியநிலையிலே சாமியமாகும். இவ்வுண்மையுணர்ந்தே "பண்டை மறைகளுமது நானேனென்று பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே" என்றும், "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்றும், "நாடிலிரண்டந்தம் பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே" என்றும் பெரியோர் பகர்ந்தார். வேதாந்தசாரமாய், வேதாந்தத்தெளிவாய், தியானயோகம் கடந்ததாயுள்ளவிடத்திலே பேசப்படும் சித்தாந்த ஞானபாதத்தில் ஆன்மாவும் சிவமும் சொரூபநிலையிற் சாமியமுற்று நிற்குநிலை அன்புமாத்திரையினுலேயாம். இது பாவனையிறந்து நின்றநிலை. இவ்வன்புநிலை திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய ஸ்ரீமீனாட்சியம்பாசமேத சோமசுந்தரப்பெருமான் அருளிய அன்பினைந்திணை என்னும் அகப்பொருலிலக்கணத்தினுலும் உணரப்படும். அனந்தகோடி சென்மங்களிலீட்டிய அளவிறந்த பசுபுண்ணியங்களினுலே நற்குலத்துதித்துச் செய்யும் சிவபுண்ணியங்களினுலேதான் சிவபெருமானிடத்துக் குன்றுத பேரன்பு உதிக்கும். அந்தப் பேரன்பு பொருளேயேனும் புகழையேனும் பற்றிநிற்காது. இதுபற்றியே திருவாசகம் "புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே" என்று அருளிற்று. இவ்வியல்பினதாய அதீத சிவபோகானுபூதிநிலை அடைந்தவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சைவசமய ஸ்தாபனாசாரியர் முதலாயினேரும் அந்நிலை அடைந்த மற்றைச் சிவானுபூதிச் செல்வருமாம். அவர்கள் அங்ஙனம் அந்நிலையில் நின்றார்கள் என்பதற்கு அவர்கள் அருளிய தமிழ்வேதத் திருவாக்குகளே சான்றும்.

காசுமீர, நேபாள, பங்காள, பாஞ்சால, இந்துஸ்தானமுதலிய உத்தரதேசங்களிலுள்ள பாஷைகளையும், மலையாளம், மஹாராஷ்டம், தெலுங்கு, கன்னடம், தமிழ்முதலிய தக்ஷிணதேச பாஷைகளையும் அடக்கி, இமாசலத்தையும் ஈழத்தையும் பிங்கலநாடி இடைநாடிகளாய்க்கொண்ட பரதகண்டத்திலே, பொதியமலைப்பெருமானுகிய அகஸ்தியமகாமுனிவர்க்குத் தமிழ் அறிவுறுத்திய பரமாசாரியராகிய முருகப்பிரானது வரைப்பாயுள்ள திருவேங்கடத்தை வடவெல்லையாகக்கொண்டு விளங்கிச் சிற்றிடமுடையதாய்ப் பிரகாசிப்பது தமிழ்நாடே; இந்தத் தமிழ்நாட்டிலே தமிழ்பேசும் பல்லோர் ஏகான்மவாதம், வைஷ்ணவம், மத்துவமுதலிய சமயத்தோராய் ஒழுக, பரம்பரைச் சைவசமயத்தவராய் இருப்பவரும் ஊழ்வசத்தினுற் சைவசமயத்துறுது லோகாயதவொண்டிறற்பாம் பினுலும் மிண்டிய மாயாவாதச் சண்டமாருதத்தினுலும் தாக்குண்டாராக, இடத்தினுலும் தொகையினுலும் மிகச் சிறுமைபூண்டோராய் ஆரியவேதத்தில் இன்னபொருள்தான் பொதிந்துளதென்று வடமொழி வியாகரணமுதலிய கருவிநூல்கொண்டும் அறியமாட்டாதவராயுள்ள சைவசமயிகள்பொருட்டுக் கலியுகாரம்பத்திலே வேதமகோததியைப் பருகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய நான்கு சிவஞானமுகில்களைச் சிவபெருமான் இரங்கி அனுப்பித் தமிழ்வேதமழையைக் கைம்மாறு கருதாவண்ணம் பொழியுமாறு செய்தருளினர். இதனுற் சிவபெருமான் சைவசமயிகள்மீது கொண்ட கருணைக்கடலுக்கோர் கரைகாணலாகுமோ? ஆகாது! ஆகாது!! இருக்காதி வேதசாரமாய் வேதாந்தமாயுள்ள தமிழ்வேதத்தைப் பெறுதற்கு வைதிகசைவசமயிகளாகிய யாமெல்லாம் முன் என்ன தவஞ் செய்தோமோ? அறிகிலேம்!

"ஆண்டவன்றன்னே யடிமையென்றுரைத்தும் அடிமையை ஆண்டவனென்றும்" உரைக்கும் கூற்றுக்கியையப் பரமான்மாவல்லாத ஆன்மாவைப் பரமான்மா என்று விபரீதமாகவுரைக்கும் ஏகான்மவாதபரமாய் இயற்றிய உபநிடதபாஷ்யம், பிரஹ்மசூத்திரபாஷ்யம், கீதாபாஷ்யம் என்னும் பிரஸ்தானத்திரயங்களையும்,

தமிழிலே அவற்றை அநுசரித்துவந்த கைவல்லியநவநீதம், விசாரசாகரம், விசாரசந்திரோதயம், விருத்திப்பிரபாகரம், தத்துவாநுசந்தானம், தத்துவபோதினி, ஆன்மபுராணமுதலிய நூல்களேயுமே ஞானசாஸ்திரங்கள் என்றும், பிரஹ்மவித்தைக்கு உரிய நூல்கள் என்றும் புகழ்ந்தும், அந்தப் பசுநூல்களே நிர்க்குணப்பிரஹ்மோபாசனை உணர்த்தும் உயர்ந்த நூல்கள் என்றும், அருணூலாகிய தமிழ்வேதத்தை நிர்க்குணோபாசனைக்குச் சாதனமாய்ச் சகுணோபாசனையை உணர்த்தும் தாழ்ந்த நூல் என்றும் அறியாமை மேற்கொண்டு குழறுபடை செய்து சிவத்துரோகிகளாகின்றார்கள் பலர். ஐயகோ! இவர்கள் அறிவு என்னே! என்னே!! ஏகான்மவாத சாங்கியயோகத்துக்குரிய நிர்க்குணபாவனையானது சம்தம்ச பதிதநியாயம்பற்றிப் பௌதிகசகுணயோகம் அத்தியாசிரமபாசுபதயோகம் என்னும் இருபாவனைகளுக்கிடையில் அகப்பட்டுள்ளதென்பது "மகாவுக்கிரவீரபத்திராஸ்திர"த்து நிஈ–ம் பக்கத்து உஎ0–ம் பிரிவுமுதல் அ0–ம் பக்கத்து ஈசுச–ம் பிரிவிறுதியாகவும், "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்துச் "சமயாதீதம் வேதசாரசைவசித்தாந்தம்" என்னும் விஷயத்தின் கீழ் உடு–ம் பக்கத்து அ–ம் பிரிவுமுதல் ககூ–ம் பிரிவிறுதியாகவும் பலபிரமாணங்கள்கொண்டு ஸ்தாபித்துள்ளோம். ஆண்டாண்டுக் காண்க.

தேவாரமுதற் பெரியபுராணமிறுதியாகிய பன்னிருதிருமுறைப்பொருள்கள் (மூவிதபாவனைகளுள்ளே முதலாவதாகிய விமலசத்துவப்பிரதானமூலப்பிரகிருதி மாயோபாதிகனும் கற்பித ஆபாசனுமாகிய தாழ்ந்த ஈசுரனது சகுணவழிபாட்டினும் உயர்ந்த இரண்டாவதாகிய நிர்க்குண ஆன்மப்பிரஹ்மோபாசனைக்குரிய சர்வசாரமுதலிய அபரசுருதிகளுக்கு அப்பாற்பட்டு விளங்கும்)வேதாந்தசூத்திரத்துக்கு ஆதாரமாகிய ஈசகோநாதி பரோபநிடதமுடிவாகிய அத்தியாசிரமபாசுபதயோகத்துக்குரிய துரிய ஞானயோகஸ்தானமாகிய முப்பத்தாறுவது சிவதத்துவத்தின்பாற்பட்ட பரமாகாய திருச்சிற்றம்பலத்து மகாசங்காரமகாருத்திரசமஷ்டிரூப

சதாசிவராகிய மகாதாண்டவேசுவரரின் மேலனவாம் என்று உண்மை கடைபிடிக்க.

வடமொழிவல்லோராய சிவபக்தப்பெரியோர் இதிகாசபுராணவாயிலாக வேதாந்தம் எனப்படும் ஈசகேநாதி உபநிடதப்பொருள்களே ஆராய்வாராயின், திருவருள்வாயிலாக அவசெல்லாம் தமிழ்வேதம் வேதசாரம் என்று அறியவல்லுநராவார். அவ்வுபநிடதப்பொருள்களே ஏகான்மவாதம்பற்றிச் செய்த பாஷ்யம்வாயிலாக ஆராயப்புகின், அவை தமிழ்வேதப்பொருளாய் முடியா.

சுவம் தெவெஷு ப்ராஹ்மணாः।

த்வம் தேவேஷு ப்ராஹ்மணாः।

"நீர் தேவர்களுள்ளே பிராஹ்மணர்" என்று சாமவேதிய பிரபதப் பிராஹ்மணமுதலிய பசுருதிகளிற் புகழப்படும் சிவபெருமானே "என்னிடத்தில் ஈசுரனும் சிவனும் பொய்" என்னும் அபசுருதி வாக்கியங்கொண்டு சகுணப்பாற்பட்ட கற்பித ஈசுரர் என்று புறக்கணித்து, மீளா அடிமையாம் ஆன்மாவாகிய நம்மைப் பிரஹ்மமென்று மதித்து, சிவபெருமானிலே முற்றிநிற்குஞ் சுருதிகளெல்லாம் நம்மீதேற்றி, அடிமுடி தேடிய பிரமவிஷ்ணுக்களையும், சிவநிந்தனைபண்ணி யாகஞ்செய்த தக்கனையும் போலக் கருதிய பயன்கள் அடையாமை மாத்திரையே யன்றித் துன்புமுறுதல் அறிவின்பாற் படாதென்றெழுதுக. சிவாகமங்களையும் தமிழ்வேத முதலியவற்றையும் விதிப்படி ஓதி யுணரின் உபநிடதமந்திரங்களின் உண்மைப்பொருள்களைக் காணலாம். (பசுவாகிய) ஆன்மாவைப் பிரஹ்மமென்று கூறும் ஏகான்மவாத பாஷ்யத்தைப் பார்த்து, சிவபரத்துவஞ் சாற்றும் அவ்வுபநிடதங்களைப் பசுநூல் என்று தூஷித்து ஒதுக்கி நம்மவர் சிவத்துரோகத்துக்கு ஆளாகாவண்ணம் தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகமுதலியன உபநிடதங்களுக்கு மாறுபடாத உண்மைப்பொருள் பொதிந்துள என்று உணர்த்தற்கே தேவாரம் வேதசாரம் என்னும் இந்நூலை எழுதத்துணிந்தேம். தமிழ்வேதமஹாதாத்பரியில் ஆழ்ந்துகிடக்

ரும் பெரிய சிவரத்தினசம்பந்தப்பொருள்களைச் சிற்றறிவினே னைய நாயேன் எடுத்துரைப்பேன் என்பது பெரியோர்க்கு நகைப் பை விளைக்குமேனும், என்னுள்ளே அங்ஙனம் லோகோபகார மாகச் சிறிதாயினும் எழுதிவைக்கவேண்டுமென்று எழுந்த ஆசை யானது அந்நகைப்பைப் பொருட்படுத்தாது ஓங்கிநிற்றலால் அதன்வயப்பட்டெழுதாநின்றேன்.

தேவாரம் வேதசாரம் என்றமையால் வேதத்தின் மொழி பெயர்ப்புத்தான் தேவாரமோ எனின், அங்ஙனமன்று; பின் அதன் கருத்து என்னையெனில், வேதம் என்று மேலே நிரூபிக்கப் பட்ட வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம், இதிஹாச புராணம் என்பவைகளிலே இலைமறை காய்கள்போன்றும், மணன் மலியிற் பொற்பொடிகள் போன்றும் அங்கங்கே இலங்கும் சிவான் மபரமான்மாக்களின் ஐக்கியத்திஞல் நேர்ந்த ஆனந்த நிலைகளை யும், சிவபெருமானது அளவிறந்த குணதிசயங்களையும், இலக் கணங்களையும், எந்தத் தேவராலும் முடிக்க இயலாதனவாய், அச் சிவபிரான் ஒருவராலே முடிக்கப்பட்டனவாயுமுள்ள அளவிறந்த வீரச்செய்கைகளையும், பிறவற்றையும் * குணோபசங்காரக் கிரமத் திஞல் ஆதரம் கொண்டியைத்துப் புகழ்ந்து † தேவாரம் துதிப்பதி ஞல் அது வேதசாரம் எனப்படும். இங்ஙனம் சிவோபாசனையிலே ஒருங்கு சேர்த்துத் தியானித்தல்வேண்டுமென்பது பிரஹ்மசூத் திரசைவபாஷ்ய (கூ. கூ. கூகூ; கூ. கூ. உகூ) த்திஞல் அறியக் கிடக்கின்றது. இம்முறைகொண்டே ஒவ்வோர் தேவாரப்பதிகங் களினும் சிவபிரானுர் குணங்களையும் வீரச்செய்கைகளையும்

---

* குணோபசங்காரம் குணங்களைத் தொகுத்துக் கூறல். † எழுதிரு முறைகள் அடங்கிய தேவாரத்தைக் கூறவே உபலக்ஷணையினுல் திருவாசக முதலிய வேனய திருமுறைகளும் தழுவப்படும்.

அமைத்து, அந்தந்தச் சிவஸ்தலவாசிகள் சிவபெருமானைத் தியானித்துத் துதித்து உய்யவேண்டும் என்னும் திருவுளக்கருத்தினால் அப்பதிகங்கள் அருளிச்செய்யப்பட்டனவாம் என்க.

இவ்வரிய பெரிய செயல்முற்றுப்பெறுமாறு செய்தருளிய சிவபெருமானையும், உமையம்மையாரையும், விநாயகப்பெருமானையும், முருகப்பிரானையும், ரிஷீந்திராராகிய அகத்தியரையும், சைவ சமயஸ்தாபனாசாரியர்களையும் திரிகரணங்களினாலுஞ் சந்ததம் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

ஸ்ரீகாசிவாசி - செந்திநாதையர்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம் வேதசாரம்.

கணபதி.

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே.

—ஞா, திருவலிவலம்.

நடேசர்.

கற்றுங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றுர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றுநின்றுரைப்பற்றுபாவமே.

—ஞா, கோயில்.

உமையம்மையார்.

இமையாதுயிராதிருந்தாய்போற்றி
யென்சிந்தைதீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனுய்நின்றுய்போற்றி
கமையாகின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகைலாயம்.

விநாயகர்.

கோவாயவிந்திரனுள்ளிட்டாராகக்
குமரனும்விக்கினவிநாயகனும்
பூவாயபீடத்துமேலயனும்
பூமியளந்தானும்போற்றிசைப்பப்
பாவாயவின்னிசைகள்பாடியாடிப்
பாரிடமுந்தாமும்பரந்துபற்றிப்
பூவார்ந்தகொன்றைபொறிவண்டார்க்கப்
புறம்பயமம்மூரென்றுபோயினூரே.

—நா, திருப்புறம்பயம்.

சுப்பிரமணியர்.

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்
காலனையுங்காலாற்கடிந்தான்கண்டாய்
புள்ளியுழைமானின்றோலான்கண்டாய்
புலியுரிசேராடைப்புனிதன்கண்டாய்
வெள்ளிமிளிர்பிறைமேற்சூடிகண்டாய்
வெண்ணீற்றுன்கண்டாய்நஞ்சேந்தின்மேய
வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

—நா, திருமறைக்காடு.

அகஸ்தியர்.

மங்கலக்குடியீசனேமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணெடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுர்முக
னங்ககத்தியனுய்ம்மர்ச்சித்தாரன்றே.

—நா, திருமங்கலக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதொலைய
வையன்பிரமபுரத்தாற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையமிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றனனென்பர்ஞானசம்பந்தனையே.

—திருத்தொண்டர்திருவந்தாதி.

திருநாவுக்கரசுநாயனார்.

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தஞ்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றிப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்கு
ளுற்றவனுற்றவிடமடையாரிடவொள்ளமுதாத்
தற்றவனூரினுவக்கரசேனுந்தூமணியே.

—திருத்தொண்டர்திருவந்தாதி.

சுந்தரமூர்த்திநாயனார்.

கூற்றுக்கெவனேபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடையலுமின்னடைக்காயுமிடுதருமக்
கோற்றொழுதுகூனனுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்றமை
சாற்றித்திரியும்பழமொழியாமித்தாணியிலே.

—திருத்தொண்டர்திருவந்தாதி.

மாணிக்கவாசகசுவாமிகள்.

வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனவண்டில்லைமன்னுந்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே.

—கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.

(க) மகாப்பிரளயகாலத்திற் சிவபெருமான் ஒருவரே உளராயினர்.

நாஸதாஸீந்நோ ஸதாஸீத்।
நாஸதாஸீத்தோ ஸதாஸீத்।

—இருக்குவேதம், க0. கஉகூ. க

தமஆஸீத் (ஆஸீத்)।
தமஸாகூடம் (கூடம்)।

—இருக்குவேதம், க0. கஉகூ. உ

காமஸ்ததக்ரே ஸமவர்த்ததாதி।
காமஸ்ததக்ரே ஸமவர்த்தத।

—இருக்குவேதம், க0. கஉகூ. ச

"மகாப்பிரளயகாலத்திலே அசத்தும் இல்லை; சத்தும் இல்லை; அந்த ஒன்று இருந்தது; அதினின்று முதற்கண்ணே காமம் எனப்படும் பராசத்தி உளதாயிற்று" என்று இருக்குவேதமும்,

யதாதமஸ்தந்ந திவாந ராத்ரிர்ந்நஸந்நசாஸச்சிவ ஏவ கேவலஃ। ததக்ஷரந் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரஜ்ஞாச தஸ்மாத் ப்ரஸ்ருதாபுராணீ॥

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்; அந்தச் (சிவ) சூரியனுடைய அந்த அழியாத முக்கியப்பொருளாகிய பிரஞ்ஞை எனப்படும் பழைய பராசத்தி உதித்தார்" என்று சுவேதாசுவதரமும் கூறுமாற்றால், இருக்குவேதத்திலே ஏகம் எனக் கூறப்பட்டது சிவபெருமான் என்றும், அவரினின்று பின்னர்த் தோற்றியவர் பராசத்தி என்றும் பெறப்படுகின்றது. (அஃதாவது சந்திர சூரியரொளியெல்லாம் ஒழிந்து, பகலிது இரவிது எனப் பகுத்தலில்லாத சூனியமாய், நாம்ரூப விசேஷமின்றி, ஸ்தூல சூக்கும சேதநாசேதனமாகிய (சத்தி)

பசு, (அசத்தின்) பாசத்தின் வியக்திநிலையற்று, ஈதெல்லாம் இருண்மயமாயிருந்த அந்தக் காலத்திலே அந்தச் சிவபிரானுர் * அத்துவிதியாய், கேவலராய், சிவப்பிரகாசராய்த் தம்மினின்று பகுக்கப்படாத வியல்படைந்த சேதனசேதனச் சத்தியோடுளராயினுர் என்பதாம்.)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையெடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே.

—ஞா, திருமறைக்காடு.

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போ
யிருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமுங்
கருடங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே.

—நா, தனித்திருவிருத்தம்.

(உ) எண்ணிறந்த பிரமவிஷ்ணுக்கள் முதலாயினுேர் ஒழிந்தகாலத்தும் சேஷித்து அழியாது நிற்பவர் சிவபெருமான்.

ममापि विष्णोर्जगकं देवमीट्यं योऽतकाले
स्र्वलोकान्समाहार । स एकश्चेरुद्रश्च (स्र्व
शास्ता) स एव वरिष्टश्च।

"பிரமாவாகிய எனக்கும், விஷ்ணுவுக்கும் பிதாவாயும், வந்திக்கற்பூலராம் தேவராயும், முடிவுகாலத்திலே சமஸ்தலோகங்களை

---

* அத்துவிதியாதல் தம்மாட்டொடுக்கிய பசுக்களிற் கலந்திருத்தல்.

யும் ஒடுக்குகின்றவராயும் எவர் இருக்கின்றாரோ, அவர் ஏகரும், சிரேஷ்டரும், வரிஷ்டருமாகிய (சிவபெருமானும்)" என்று சர போபநிடதம் சாற்றுகின்றது.

வஹஹ்ரகொடயஸ்ஸதிவ்ரஹ்மாணா ஸ்தியர்கூர்த்வஜாஃ।
ப்ரஹ்மாணொஹரயொரூத்ராஸ்தத்ர வ்யவஸ்திதாஃ।
ஆஜ்ஞயாதெவதெவஸ்ய மஹாதெவஸ்ய சூலினஃ॥

ஸஹஸ்ரகோடயஸ்ஸந்தி ப்ரஹ்மாண்ட ஸ்திர்யகூர்த்வஜாஃ।
ப்ரஹ்மாணே ஹரயோ ருத்ராஸ்தத்ர வ்யவஸ்திதாஃ।
ஆஜ்ஞயாதேவதேவஸ்ய மஹாதேவஸ்ய சூலிநஃ॥

—ஆதித்தியபுராணம்.

ப்ரஹ்மநாராயணேசாநாந்த்ரயாணாம் ப்ரக்ருதெள லயஃ।
ஏகொஹி பகவாநீசஃ காலஃ கவிரிதி ஸ்ம்ருதஃ॥

ப்ரஹ்மநாராயணேசாநாந்த்ரயாணம் ப்ரக்ருதெள லயஃ।
ஏகோஹி பகவாநீசஃ காலஃ கவிரிதி ஸ்ம்ருதஃ॥

—கூர்மபுராணம்.

அஸங்க்யாதாச்ச காலாக்யா அஸங்க்யாதாஃ பிதாமஹாஃ।
ஹரயச்சாப்யஸங்க்யாதா ஏக ஏவ மஹேச்வரஃ॥

—இலிங்கபுராணம்.

அஸங்க்யா விலயம் யாந்தி ப்ரஹ்மாணஃ பண்டிதோத்தமாஃ।
அஸங்க்யா விஷ்ணவோ ருத்ரா அஸங்க்யா வாஸவாதயஃ॥

—ஸ்காந்தபுராணம்.

"பிரமாண்டத்திலே பிரமா விஷ்ணு உருத்திரர்கள் ஆயிர கோடியினர் குறுக்கும் மேலுமாக அங்கங்கே தேவதேவராகிய் சூல பாணியாரின் ஆஜ்ஞையால் ஸ்தாபிக்கப்பட்டுளர்" என்றும், "பிர

மஹிஷ்ணு ருத்திரர் என்னும் மூவர்க்கும் லயம் பிரகிருதியிலே யாக, பகவானும், காலரும், கவியுமாகிய சிவபெருமான் ஒருவரே (எஞ்சி) உளர்" என்றும், "எண்ணிறந்த காலர்களும், எண்ணிறந்த பிரமாக்களும், நாராயணர்களும் (ஒழிந்துவிட) சிவபெருமான் ஒருவரே (எஞ்சி) உளராயினர்" என்றும், "எண்ணிறந்த பிரமாக்களும், எண்ணிறந்த விஷ்ணுக்களும், எண்ணிறந்த உருத்திரர்களும், எண்ணிறந்த இந்திரர்களும் ஒழிந்தார்கள்" என்றும் ஆதித்தியபுராண முதலியவைகளிலே கூறப்பட்டுள்ளது.

செத்துச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
வத்தனென்றரியோடுபிரமனுந்
தத்தியஞ்செயநின்றநற்சோதியே.

நூறுகோடிபிரமர்களெஞ்சிநூ
றாறுகோடிநாராயணரங்ஙனமே
யேறுகங்கைமணலெண்ணிலிந்திர
ரீறிலாதவனீசனெருவனே.

வாதுசெய்துமயங்குமனத்தரா
யேதுசொல்லுவீராகிலுமேழைகாள்
யாதோர்தேவரெனப்படுவார்க்கெலா
மாதேவன்னலாற்றேவர்மற்றில்லையே.

கூவலாமைகுரைகடலாமையைக்
கூவிலோடொக்குமோகடலென்றல்போற்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பராற்
றேவதேவன்சிவன்பெருந்தன்மையே.

தாயினுநல்லசங்கரனுக்கன்ப
ராயவுள்ளத்தமுதருந்தப்பெரூர்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துப்பட்டமனத்தரே.

—நா, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

(ங) உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்படும் பிரஹ்மசப்தம் சிவபெருமானே உணர்த்துமெனல்.

பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து "அந்தரதிகணத்" (க. க. உஉ) தினும், "அந்தரியாமியதிகரணத்" (க. உ. ககூ) தினும், "காரியாதிகரணத்" (ச. ங. கங) தினும் அமிர்தம் என்னும் மொழி சிவபெருமான் திருநாமம் எனக் கூறப்படலானும்,

கதூ ஹூ ததெவாzஜ்ய தகீஷ்வ்ருதிக|

தத்ப்ரஹ்ம தேவாம்ருதமுச்யதே।

"அது பிரஹ்மம்; அதுவே சிவம்" என்று கடோபநிடதத் (இ. அ; கூ. க) திற் கூறப்படுகின்றமையானும்,

ஹ்ருஹ்ருதி ஸிவஸ்ரூஷ்ணா ஸவ-ஸாத்ருக்ஷ்யதி ஷ்ணுஷு|

ப்ரஹ்மேதி சிவசக்த்யோஸ்து ஸர்வாத்மத்வமிதி ஸ்புடம்।

"சிவனுரதும் சத்தியாரது சர்வாத்துமகத்துவமே பிரஹ்மம் எனல் வெளிப்படை" என்று கைலாசசங்கிதை (ககூ. சஂ) யிற் கூறப்படலானும்,

ஸகோஹி நாமபோதைஸ்து ஸ்திதஸ்ஸ பரமேச்வரஃ|
ப்ருஹத்வாத் ப்ரஹ்மணத்வாச்ச ஸிவோ ப்ரஹ்மைவ யோகதஃ॥

ஏகோஹி நாமபோதைஸ்து ஸ்திதஸ்ஸ பரமேச்வரஃ|
ப்ருஹத்வாத் ப்ரஹ்மணத்வாச்ச ஸிவோ ப்ரஹ்மைவ யோகதஃ॥

"ஏகராகிய பரமேசுவரரே நாமபேதங்களினுல் நிலையுற்றனர்; மேன்மையினுலும் பெருமையினுலும் யோகப்பெயராற் பிரஹ்மம் எனப்படுவது சிவபெருமான்" என்று பராக்கியாகமத்தினும்,

ஸச்சிதாநந்தரூபீயஸ்ஸதஸத்வ்யக்திவர்ஜிதஃ|
ஸநிவஸ்ஸர்வகஸ்ஸத்பிர் ப்ரஹ்மசப்தேந சப்திதஃ॥

"சச்சிதானந்தரூபியாய்ச் சேதனசேதனப்பிரபஞ்சத்துக்கு வேறும் வியாபகராயுள்ள சிவபெருமான் பிரஹ்மசப்தத்தினாற் கூறப்படுகின்றார்" என்று அஜிதாகமத்தினும்,

ஸிவம் பராத்பரம் ப்ரஹ்மமப்ரமேயமநூபமம்।
ஸுத்தத்வாச்ச ஸிவம் ப்ரோக்தம் ஸ்வயந்தச்ச பராத்பரம்।
ப்ருஹத்வாப் ப்ருஹ்மரூபாச்ச ப்ருஹ்மமித்யபிதீயதே॥

"அளக்கவொண்ணாததாய், உவமனில்லாததாய், பராத்பரமாயுள்ள பிரமமானது சிவம்; அது சுவயமே பராத்பரமாயும் சுத்தமாயுமிருத்தலிற் சிவம் எனப்படும்; மேன்மையினாலும் பேருருவமுடைமையானும் அது பிரஹ்மம் எனப்படும்" என்று காரணாகமத்தினும், வாதுளாதி ஆகமங்களினும் கூறப்படலானும் பிரஹ்மமே திராவிடசுருதிகளிற் சிவன் எனப்படுகின்றது.

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மா
னவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தா
லிவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே.

—நா, தனித்திருவிருத்தம்.

மாலினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியுஞ்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே.

—நா, திருச்சிக்கல்.

சிவனெனுமோசையல்லதறையாவுலகிற்றிருநின்றசெம்மையுளதே, யவனுமொரையமுண்ணியதளாடையாவதுதன்மேலொராடலரவங், கவணளவுள்ளவுண்குகரிகாடுகோயில்கலனுவதாடுகருதி, லவனதுபெற்றிகண்டுமவனீர்மைகண்டு மகிழ்நர்வர்தேவரவரே.

—நா, சிவனெனுமோசை.

பேற்றினையொன்றறியாததக்கனதுவேள்விப்
பெருந்தேவர்சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச்
செற்றுமதிக்கலகிதையத்திருவிரலாற்றேய்வித்
தருள்பெருகுசிவபெருமான்சேர்தருமூர்வினவிற்
றெற்றுகொடிமுல்லையொடுமல்லிசைசெண்பகமுந்
திசைபொருதுவருபுனல்சேரிசிலின்றென்கரைமேற்
கற்றினநன்கரும்பின்முளைகறிகற்கக்கறவை
கமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே.

—சு, திருக்கலயநல்லூர்.

மாறிலின்றென்னைமயக்கிடும்வஞ்சப்
புலனைந்தின்வழியடைத்தமுதை
யூறிலின்றென்னுளெழுபாஞ்சோதி
யுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்த
வின்பமேமெயென்னுடையன்பே.

—திருவாசகம்.

(சு) இருதயகுகையின்கண்ணே பிரவேசித்தவர் சிவபெருமான்.

தம் துர்தர்சம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம்
கஹ்வரேஷ்டம் புராணம்।

"காண்டற்கரியரும், மறைவினரும், (சீவான்மாவோடு உடல சுத்தித) கூடப்பிரவேசித்தவரும், குஹைக்குள் மறைந்தவரும், குஹைக்கணமர்ந்தவரும், பழையருமாயினர் (சிவபெருமான்)" என்றது கடவல்லியுபநிடதம். (உ. கஉ)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தீ
நலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற
சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற
சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை
நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு
ணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்
கனகமாமணிநிறத்தெங்கடவுளானே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

(நி) சீவான்ம பரமான்மாவாகிய இருபக்ஷிகள்.

ஆஹுவணூ வயாஜா ஸமாயா ஸமானம்
வ்ருக்ஷம்பரிஷஸ்வஜாதே | தயோரன்யஃ பிப்பலம்
ஸ்வாத்வத்யனஸ்னந்யோபிசாகஶீதி॥

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம்
பரிஷஸ்வஜாதே । தயோரன்யஃ பிப்பலம் ஸ்வாத்வத்யன
ஸ்னந்யோபிசாகஶீதி॥

"பிரியா நண்பினையுடைய இருபக்ஷிகள் (சீவான்ம பரமான்மாக்களாகிய ஆன்மாவும் சிவபெருமானும்) ஒரே விருக்ஷத்தில் (சரீரத்தில்) இயைந்துள்ளன; அவற்றுள் ஒன்று (சீவான்மா) இனிய பழத்தை (போகத்தை) தய்க்கின்றது; மற்றது (பரமான்மா) உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று இருக்குவேத (க. ஈசூ. உ0) மும், முண்டகோபநிடத (கூ. க. க) முங்கூறுகின்றன.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.

—சு, திருவாரூர்.

---

* மீளா அடிமை என்றமையினால் ஆன்மாவும், உமக்கே ஆளாய் என்றமையினாற் பரமான்மாவும் பெறப்பட்டன.

அன்னமிரண்டேவாற்றங்கரையினிற்
றுன்னியிரண்டுந்துணைப்பிரியாதன்னந்
தன்னிலையன்னந்தனியொன்றதென்றக்காற்
பின்னமடவன்னப்பேறணுகாதே.

—திருமந்திரம்.

(சு) பிரமவிஷ்ணு உருத்திரர்களுக்குத் தலைவர் சிவபெருமான்.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீல
கண்டம் ப்ரசாந்தம் । த்யாத்வா முநிர்கச்சதி பூதயோ
நிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் । ஸ ப்ரஹ்மா
ஸ ஸிவஸ்ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரம: ஸ்வராட் । ஸ ஏவ
விஷ்ணு ஸ்ஸப்ராணஸ்ஸகாலோக்நிஸ்ஸ சந்த்ரமா: ॥

"பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தருமாகிய உமாசகாய சிவபெருமானை முனியானவன் தியானித்துப் பூதகாரணரும் சமஸ்த சாக்ஷியுமாயிருப்பவரை இருளுக்குமேற்போய் அடைகின்றான்; * அவர் பிரமா; அவர் உருத்திரர்; அவர் இந்திரர்; அவர் அக்ஷர்; அவர் பரமசுவராட்டு; அவரே விஷ்ணு; அவர் பிராணன்; அவர் காலர், அக்கினி, சந்திரன்" என்று கைவல்லியோபநிடதமும்

---

* ஈண்டு அவர் பிரமா, அவர் விஷ்ணு, அவர் உருத்திரர் என்றமையால் அவர் மூவர்க்கும் தலைவராதல் பெறப்பட்டது.

யொ வை ரூத்ரஸ்ஸபகவாந்யச்ச ப்ரஹ்மா பூர்புவஸ்
ஸுவஸ் தஸ்மை வை நமோநமஃ । யச்ச விஷ்ணுர் யச்ச
மஹேச்வரஃ।

"எவர் பகவானுகிய உருத்திரரோ, எவர் பிரமாவோ, எவர் பூர்ப்புவர்சுவரோ அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம், எவர் விஷ்ணுவோ, மகேசுவரரோ (அவர்க்கு நமஸ்காரம்)"என்று அதர்வசிரோபநிடதமும் கூறுமாற்றுற் பிரம விஷ்ணு உருத்திராயினே செல்லாம் சிவபிரானது விபூதியாம் என்றும், இம்மூவரையும் கடந்தவர் அச்சிவபிரானே என்றும் அறியற்பாற்று.

தேவராயுமசுராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகானீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலோருவன்மேயதுமுதுகுன்றே.

—ஞா, திருமுதுகுன்றம்.

சிவனுகித்திசைமுகனுய்த்திருமாலாகிச்
செழுஞ்சுடராய்த்தீயாகிநீருமாகிப்
புவனுகிப்புவனங்களேனத்துமாகிப்
பொன்னுகிமணியாகிமுத்துமாகிப்
பவனுகிப்பவனங்களேனத்துமாகிப்
பசுவேறித்திரிவானேர்பவனுய்நின்ற
தவனுயதலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே.

—நா, தலையாலங்காடு.

குற்றமொன்றடியாரிலாஞற்
கூடுமாறதனைக்கொடுப்பானைக்
கற்றகல்வியிலும்மினியானைக்
காணப்பேணுமவர்க்கெளியானை
முற்றவஞ்சுந்துறந்திருப்பானை
மூவரின்முதலாயவன்றன்னைச்
சுற்றுநீள்வயல்சூழ்திருநீடூர்த்
தோன்றலைப்பணியாவிடலாமே.

—சு, திருநீடூர்.

(எ) சிவபெருமான் உமாபதி எனப்படுதல்.



கம்விகாவதய உமாவதயெ.....நமஃ।

அம்பிகாபதய உமாபதயே.....நமஃ।

"அம்பிகாபதியார்க்கு, உமாபதியார்க்கு நமஸ்காரம்" என்று தைத்திரீய ஆரணியக (க0. உஉ. ச0) த்திலும்,

உமாஸஹாயம் பரமேச்வரம்।

உமாஸஹாயம் பரமேச்வரம்।

"உமாசமேதராகிய சிவபெருமானே" என்று கைவல்லியோப நிடதத்திலும் ஏனைய இதிகாசபுராணாதிகளிலும் கூறப்படுகின்றது.

உண்ணமுலையுமையாளோடுமுடனுகியவோருவன்
பெண்ணுகியபெருமான்மலிதிருமாமணிதிகழ
மண்ணுர்ந்தனவருவித்திரண்மழலம்முழவதிரு
மண்ணுமலிதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே.

—ஞா, திருவண்ணுமலை.

ஓதிமாமலர்கடியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினனே
யாதியேயமர்கோவேயணியணுமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே.

—நா, திருவண்ணுமலை.

(அ) கேநோபநிடதத்து உமையம்மையார் (இமவான் மகளாதலில்) ஐமவதி எனப்படுதல்.



ஸ தஸ்மிந்நேவாகாஸே ஸ்த்ரியமாஜகாம பஹுஶோபமாநாமுமாம் ஹைமவதீந்தாக்ம் ஹோவாச கிமேதத்யக்ஷமிதி।

ஸ தஸ்மிந்நேவாகாஸே ஸ்த்ரியமாஜகாம பஹுஶோபமாநாமுமாம் ஹைமவதீந்தாக்ம் ஹோவாச கிமேதத்யக்ஷமிதி।

"அந்த ஆகாசத்திலே மிகுந்த பிரகாசமுடையதும் ஐசுவரியமுமாகிய அந்த மாதை (இந்திரன்) அடைந்து அவளை நோக்கி, அந்த யக்ஷர் யாரென்று கேட்டான்" என்று கேநோபநிடத (உரி) மும்,

தெவாதிலுஂவு வலநிலிஹம் மெலஹம் விதாமருதா।
கநாலிதி ஸ்ததஹ்லுவு மவசா நஹ்லாஹ்லஹி।
வொரவிவீரெண ஜநகஸ்ரிகூஷித வஹ்வததாநா।
தயாரவி ஜநதா வெலயாம வஹா தாக்ஷாயணீதிரிழி।
தஹலெவ ஸகாரவி வொலாஞ்ஜி லாவெநஸ்ரா।
தஹஹுலெவ மநாரவி வொலாஞ்ஜி லாவெநஸ்ரா।
தஹஹுலெவநா தெஹி கூதுவி ஜநிராவாலி।
உதிதெவுர கழிலிதா தெவதி வித்தவாவலிஹாஷிதி।
கூயெலு தாக்ஷாயணீவாவெ தாஹிதா ஹுதெய தீயா।
திவெவம் கூரா சிதாரகுர விசிவதம் மாரா மிரிழி।
வகுவாசிவ வாதாரோவாதெவாரதநாதெத ஹுஸழி।
ஐராயதாநாரவி யாமதெவி தீணாரா சாநவீவஹா।
தெளகாரஷ கூதாலெயாள கூம்வாவகுதெயொதிவியெ।
வு தீயாய சிஹாக்நாயதி வாவஹாஷிவா தஹா।
திவி நாரவி வம்வாவெ சாநவெ வாத சிதெவெ।
தெவீ வாலெவ வம்ஜாதா வெவ்வலியெவொத லொவாரி।
தாநீவஷாஹி சிவா நீஸ வாசாஜும் ஜமதாரணிழி।
வகாலுஜா தீணய நாஜும் உவிம்வ நிலா நநாழி।
வாகுவதாரா சீமாமாஜுவிலவதீம் ஸாவிவி தாழி।
உஷாஹீவஷ சிநாராஜா நியிம லவ்வ வநிஜாநி।
வீணாவு தாரா வசாதாய ஜமாசி லவநா சாதா।
தீதிசிநாவு சிஹிஷீ நிவீத்தெவலொ வநாஜ।
உதிவாவலெள தெளதெவீ வெராவாவ ஜமதாவிகா।
ஸீணாகும் வவநம சாதாவி திரளவ்ரா யாவாசிசி।
சிநாவ ஹிசிவாமொராலெள சிநாதெவ வாதாதிதா।

வவ-ஃதாz வதி-தாம் வ்ரூவ்தா வாவ-ஃதீதி-ஹியாம். ஏயெ|
வ-ஏணை-ஃத-ஈ வஜுஜெவஷெ-ஃ தவ்யா சூவீத்வொரதீ:|
ரதாவித்ரு ஹ்யாரவி வாசுயத்தீ வ்ரஜீவ்ஹி தி:|
ரதெரதெதி நிஷிஜ்ஞாயஏ-ரவ்யா வ்ருணவாத்திகா||

தேவாதிலங்க்ய வசநமஹம் கேஹம் பிதுர்கதா।
அநுபூதஸ்ததஸ்ஸம்யகவமாநஸ் ஸுதுஸ்ஸஹ:।
சோபிவீரேண ஜநகஸ்ரிக்ஷிதஸ் ஸப்ததந்துநா।
ததாபி ஜநதா ஹேயாம் ஸதாதாக்ஷாயணீதிமாம்।
ததஹம் நைவ ஸுக்தாஸ்மி ஸோடுந்த்ரிபுவநேச்வர।
ததத்ய மே வரம் தேஹி குத்ரசிஜ்ஜநிரஸ்துமே।
இதி தேவ்யார்த்திதோ தேவ: ஸ்மிதபூர்வமபாஷத।
ஆர்யே தாக்ஷாயணீச்சாசேதாஹிதா ஹ்ருதயேத்ருடா।
தவைவம் குரு மத்வாக்யாத்திமவந்தம் குரும் கிரிம்।
ஸ த்வாமேவ ஸுதாமாப்துங் தபஸ்யாந்தநுதே ப்ருஸம்।
த்யாயமாநோங்கிரியுக்மம் தே பித்ருணும் மாநவீசஸா।
தெளகுருஷ்வ க்ருதார்த்தெள த்வம் பவாபத்யம் தயோ: ப்ரியே!
வ்யதீயாய மஹாந் காலோ: ப்ராஸஸாத ஸிவாததா।
தஸ்மிந் ஸவஸிஸம்ப்ராப்தே மாநஸே ஸ்நாதுமத்ரிபே।
தேவீ பாலேவ ஸம்ஜாதா ஸ்வேச்சயைவோத்பலோபரி:
தாந்த்ருஷ்ட்வா ஹிமவாநீஸ வாமார்த்தாம் ஜகதோரணிம்।
சதுர்புஜாந் த்ரிணயநாம் சந்த்ரபிம்பநிபாநநாம்।
ஸுகபர்தாம் ம்ருகாங்கார்த்தவிலஸந்தீம் ஸுஸிஸ்மிதாம்।
த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமநா ராஜாநிதிம் லப்த்வேவ நிர்த்தந:।
ப்ரணம்ய தாம் ஸமாதாய ஜகாம பவநம் முதா।
தத்ர மேநாஸ்ய மஹிஷீ நிவ்ருத்தம் தபஸோ வநாத்।
இதி ஸ்துவந்தெள தெளதேவீ ப்ரோவாச ஜகதம்பிகா।
ச்ருணுதம் வசநம் மாதாபிதரௌ ஸ்தோ யுவாம் மம।
மேநாச ஹிமவாந் சோபௌ மேநா தே ஸ்வஸுதாம்ததா।
பார்வதாபத்யம் ப்ராப்தா பார்வதீத்யபிதாம் ததே।
பூர்ணேது பஞ்சமே வர்ஷே தஸ்யா ஆவீத் தபோரதி:।
மாதாபித்ருப்யாமபி ஸா கதயத் ஸ்வமபீப்ஸிதம்।
மாத்ரோமேதி நிஷித்தா யதுமாக்யா ப்ரணவாத்மிகா||

லெம்பிரானென்னினல்லாலென்செய்கேனேழையேனே.

—நா, தனித்திருநேரிசை.

தோண்டரஞ்சுகளிறுமடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனீலமொட்டலருங்கேதாரமே.

—ஞா, திருக்கேதாரம்.

அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசிமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னிமன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
யஞ்சொலாராங்கெடுக்குமந்தணூருசென்பதே.

—ஞா, திருவாரூர்.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லே
னழிவுடைத்தாயவாழ்க்கையைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேனுக்கடலூர்வீரட்டனீரே.

—நா, திருக்கடலூர்வீரட்டம்.

எலும்பாலணியிறையம்பலத்தோனேல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே.

—திருக்கோவையார்.

செம்மைவெண்ணீற்றொருமையினிரண்டுபிறப்பின்சிறப்பினிற்
மும்மைத்தழலோம்பியநெறியார்நான்குவேதமுறைபயின்றார்
தம்மையெந்துபுலனும்பின்செல்லுந்தகையாரறுதொழிலின்
மெய்மையொழுக்கமேழுலகும்போற்றுமறையோர்விளங்குவது.

பொருவருந்தவத்தான்புலிக்காலனி
மருமுனியெந்தையர்ச்சித்துமுள்ளது
பெருமைசேர்பெரும்பற்றப்புலியூரென்
றொருமையாளர்வைப்பாம்பதியோங்குமால்.

அறிவினேல்லையாயதிருத்தில்லையேல்லையமர்ந்திறைஞ்சிப்
பிறிவிலாததிருவடியைப்பெருகுமுள்ளத்தினிற்பெற்றுச்
செறியுஞானபோனகர்வந்தருளும்புகலிசென்றிறைஞ்சி
மறிசேர்கரத்தார்கோயில்பலவணங்கிமகிழ்ந்துவழிக்கொள்வார்.

—பெரியபுராணம்.

மேலே கூறிய தேவாரமுதலியவற்றால், ஆன்மா அருள் எனப் படும் ஞானவிளக்குக்கொண்டு, கருடபாவனைபோலச் சிவோஹம் பாவனைவாயிலாக அறிவுவிரிந்து சிவத்தை நாடி, அச்சிவத்துள்ளே தான் என்று ஒருமுதல் காணப்படுமாறின்றிச் சிவவியாபகத்துள் அடங்கிநிற்றல் உணர்த்தப்பட்டதாம் என்க.

*நிர்க்குணனுய்நின்மலனுய்நித்தியானந்தனுய்த்
தற்பரமாய்நின்றதனிமுதல்வ—னற்புதம்போ
லானவறிவாயளவிறந்துதோன்றுமேனி
வானமுதல்கனையின்வந்து.

கண்டதையன்றன்றெனவிட்டுக்கண்டசத்தா
யண்டனையான்மாவிலாய்ந்துணரப்—பண்டனைந்த
ஆனத்தைத்தான்விடுமா றுத்தமனிணைக்கருட
சானத்திற்றீர்விடம்போற்றான்.

நானவனென்றெண்ணினர்க்குநாடுமூளமுண்டாத
ருனேனவொன்றின்றியேதானதுவாய்—நானேனவோன்
றில்லென்றுதானேயெனுமவரைத்தன்னடிவைத்
தில்லென்றுதானுமிறை.

—சிவஞானபோதம்.

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தோன்றுந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியுற்பாலே.

—திருவாசகம்.

திண்டாம்பயனெனுந்திருவருடெளியிற்
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தோன்று
மென்றிறையியற்கையியம்புதறகும்.

—சங்கற்பநிராகரணம்.

---

* 'நிர்க்குணனுய்' 'கண்டதை' 'நானவனென்' என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களின் பொருளைச் "சிவஞானபோதவசனலங்காரதீப"த்து கூ-ம் சூத்திரத்து உரை, கூ. 1,6,7,8,9-ம் பிரிவுகளிலும், க0-ஞ் சூத்திரத்து கங-ம் பிரிவிலுங் காண்க.

ஈசுஅ தேவாரம் வேதசாரம்.

புந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென்றுசென்
றேறிச், சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவு
ருவண்ண, மேந்தையுந்தாயும்யானுமென்றிங்ஙனேண்ணில்பல்
லூழிகளுடனுய், வந்தணுகாதுணுகியுள்கலந்தான்மருவிடங்
திருவிடைமருதே.

—திருவிசைப்பா.

இங்ஙனம் திராவிடசித்தாந்தசாஸ்திரப்பொருளும் திராவிட வேதப்பொருளும் ஒற்றுமையுற நிற்பதை ஓர்ந்துணர்க. கூ, கo–ம் சூத்திரங்களால் துரிய அருட்சிதம்பர எல்லையே அறிவுறுத்தப் பட்டதாம் என்க. வேதமுடிவிலே கூறப்பட்ட தியானயோகமும், ஈண்டுச் சித்தாந்தத்திலே கூறிய ஞானயோகமும் அருட்சிதம்பர வெல்லையினவாய் நிற்றலால், இவ்விரு யோகப்பயனும் ஒன்றும் என்க.


ஏனைய பதஞ்சலியோகம், ஏகான்மவாத நிர்குணசாங்கிய யோக (இராஜயோகம்) முதலியவனைத்தும் மூலப்பிரகிருதிப் புருஷ தத்துவத்தின்பாலதாய்ப் பசுநிஷ்டையாய் நிலைத்து, மூப்பத்தாறு தத்துவங்களைக் கடந்த அருட்சிதம்பரவெல்லையைத் தலைப்பட்டுச் சிவத்தை அறியமாட்டாமையாலன்றே,

எண்ணுயிரத்தாண்டுயோகமிருக்கினுங்
கண்ணுரமுதனைக்கண்டறிவாரில்லை
யுண்ணுடியுள்ளேயொளிபெறநோக்கிடிற்
கண்ணுடிபோலேகலந்திருந்தானே.

என்றார் திருமூலநாயனார்.

(கoசு) திருச்சிற்றம்பலவர் தரிசனத்தினல் நோயெல்லாம் நீங்கும்.





யொ ஹவதி விஜஹஸ்ரவிஜோ ஹவதி ஸ்வதாவீ ஹஸ்ர நஸ்வதா
வீ ஹவதி தஸ்ராஸ்ர வஸ்தூம் வெதஸ்ரீக்ஷ்ரவி நஸ்ரஹஸ்ரொ
வாஸிநிஷ்டஸ்ரு ஸ்ரெத ஹஸ்ரு ஸ்ரிஹாஸ்ரெதாஸ்ரஹஸ்ரு ஸ்ரவெஷ ஸ்ரு ஹஸ்ர
ஸொஸ்ரஃ|

நைதக்ம் ஸேதுமஹோராத்ரே தரதோ ந ஜரா ந ம்ருத்யுர்ந
ஸுகோ ந ஸுக்ருதம் நதுஷ்க்ருதம் | ஸர்வே பாப்மாநோதோ
நிவர்த்தந்தே பஹதபாப்மாஹ்யேஷ ப்ரஹ்மலோகஸ்தஸ்மாத்வா
ஏதக்ம் ஸேதும் தீர்த்வாந்தஸ்ஸந்நஹந்தே பவதி வித்தஸ்ஸந்ந
வித்தோ பவத்யுபதா பீஸந்நுபதாபீபவதி தஸ்மாத்வா ஏதக்ம்
ஸேதும் தீர்த்வாபிநக்தமஹரேவாபிநிஷ்பத்யதே ஸக்ருத்விபா
தோஹ்யேவைஷ ப்ரஹ்மலோகஃ|

"அந்தத் (திருச்சிற்றம்பல) சேதுவைப் பகல் இரவேனும், ஜரையேனும், மரணமேனும், சோகமேனும், நன்மையேனும், தீமையேனும் கடப்பதில்லை; பாவிகளெல்லாம் அங்கிருந்து மீண்டு விடுவர்; இந்தப் பிரமலோகம் பாவத்தினின்று நீங்கியதன்றோ; அதனாற் குருடாயுள்ளோன் இந்தச் சேதுவைக் கடந்து குருடு நீங்கப்பெறுவன்; காயமுற்றோன் காயம் நீங்கப்பெறுவன்; துன்புற்றோன் துன்பம் நீங்கப்பெறுவன்; ஆகலின், இந்தச் சேதுவைக் கடந்தபோது இராவானது பகலாகின்றது; பிரமலோகம் (யாவர்க்கும்) ஒரேமுறையிற் பிரகாசிப்பது" என்றது சாந்தோக்கியம் (அ. சு. க, உ)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானேநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே.

கோணுகணையானுங்குளிர்தாமரையானுங்
காணுர்கழலேத்தக்கனலாயோங்கினன்
சேணுர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணுநோயெல்லாம்வாளாமாயுமே.

—ஞா, கோயில்.

(க0எ) ஆன்மாவை வியாபகமாக்குதற்குச் சிவபெருமான் வசீகரிப்பவர்.

வஸகோ வஶீ।

ஏகோ வஶீ।

"(ஆன்மாவின் அறிவை அருண்ஞானத்தினால்) *வசீகரித்து (வியாபகஞ் செய்யும் ஏகர் (சிவபிரான்)" என்று கடோபநிடத (நி. கூ) மும்,

வஷ-ஷ்வ) வஶீ।

ஸர்வஸ்ய வஶீ।

"அனைத்தையும் வசீகரிப்பவர்" என்று பிருகதாரணியோப நிடத (சு. ச. ஊ) மும் கூறுகின்றன.

பிறையார் சடையண்ணல்
மறையார் மருதரை
†நிறையானினைபவர்
குறையாரின்பமே.

—ஞா, திருவிடைமருதூர்.

†நிறைவுவேண்டுவீ
ரறவனன்னியூர்
மறையுளான்கழற்
குறவுசெய்ம்மினே.

—ஞா, திருவன்னியூர்.

(க0அ) ஆன்மா முத்திதசையிலே சிவனுடைய அபகதபாப்மத்துவாதி (சர்வஜ்ஞத்துவாதி) எண்குணங்களைச் சாமியமாக (ஒப்பாக) அடைதல்.

நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி।

நிரஞ்ஜநஃ வரூ0 ஸாஷ்ய-ஷைதி।

"நிரஞ்சனனாய் ஆன்மா பரமசாமியத்தை அடைகின்றான்", என்று முண்டகோபநிடத (கூ. க. கூ) மும்,

---

*வசிப்பவரும்வியாபகத்தனமலந்தபமுத்தியடைவு—திருத்தணிசைப் புராணம். †நிறைவு—வியாபகம்.

உக்ருஸ்ரிவ ஸஹோஹவெஸ்।

முக்தஸ்ரிவ ஸ்மோபமேவத்।

"முக்தன் சிவசாமியமுறுகின்றான்" என்றும்,

ஸாஜ்யம் ஸிவஸஹோதரா।

ஸாத்யம் ஸிவஸமாகதா।

"சாதிக்கற்பாலது சிவசாமியம்" என்றும் வாயுசங்கிதையும்,

ரஸ்ரஸாதஜ்ஞாவஸ்வெஸ் வஸ்கூஉஜெ தஜாதஜ்ஞி।
வஜ்ஞைவஸ்ரஷஸவஸ்வகூஸ்ரவ்ஜ்ஞைநீவ தஜெதாஜநு ஸ்தீ।
வஜ்ஞைஸ்வகூ உஜெதவஜ்வஸ்ரிதைரஜி வஜநாஸ் வ்ஸஜ்டு।
தயாஜஸ்ரிவவ நஜ்கராவஸ்வஜ்ஜுகூஸ்ரஜி யாஜிஜ்கூர்ட்।
ஊஜெதுவஸ் ஸஜ்ஞவஸ்கூராஜ்ஞஸ்ரஸாயுவஜெஷா ஸ்ரிஜ்ஞவிதஸ்॥

ஈஸ்வராத்ஸத்குணஸ்ஸர்வே ஸம்க்ரமந்தே ததாத்மநி।
புண்யபூருஷ ஸம்பர்க்காத்புண்யாநீவததோந்யதஃ।
புண்யம் ஸம்க்ரமதே பும்ஸாமித்யாதி வசநாத்ஸ்புடம்।
ததாச சிவவந்முக்தாஸ் ஸர்வஜ்ஞத்வாதி தார்மிகாஃ।
இத்யேவம் குணஸம்க்ராந்த ஸாம்யபக்ஷோ நிரூபிதஃ॥

"சிவபெருமானினின்று அக்குணமனைத்தும் அப்போது ஆன்மாவிற் சங்கிரமிக்கின்றன; புண்ணியபுருஷசம்பர்க்கத்தினாற் புண்ணியங்கள் ஒருவனுக்கு எய்துமாறுபோல என்றற்றொடக்கத்தவற்றால் வெளிப்படை; அங்ஙனமே சிவபெருமானைப்போல முக்தராயினோரும் சர்வஜ்ஞத்துவாதி குணங்களையுடையராயினர்; இங்ஙனம் குணங்கள் ஆன்மாவிற் சங்கிரமிக்கும் என்னும் சாமியபக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகமும் உரைக்கின்றன.

பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து ஆவிருத்தியதிகரணத்திற் கூறியாங்கு சிவபாவனை செய்தலாற் சிவசாமியம் ஆன்மாவுக்கு எய்தும். இதனை கo நி–ம் இலக்க போக விஷயத்தினுங் காண்க.

பத்திப்பேர்வித்திட்டேபரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகையறும்வகைநினையா
முத்திக்கேவிக்கத்தேமுடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக்காணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேவித்திட்டுத்திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
*சேர்வார்தாமேதானுகச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங்கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே.

—ஞா, திருக்கழுமலம்.

பண்ணினிசையாகிநின்றுய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லாயுய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயாயுய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றுய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றுய்போற்றி
கைலைமலையாளனேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகயிலாயம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுள்ளேப்போலென்னேப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

---

* "சேர்வார்தாமேதானுகச்செயுமவன்" என்பது தம்மை இடைவிடாது தியானிப்போரை எண்குணங்களானிறைத்துத் தன்வண்ணமாகச் செய்பவர் எனப் பொருள்படும். இதனல் ஆன்மா சிவமாதல் வெளிப்படை.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே.

—பதினொராந்திருமுறை.

தன்னையறிவித்துத்தான்றானேச்செய்தானைப்
பின்னைமறத்தல்பிழையலது—முன்னவனே
தானேதானேச்செய்துந்தைவமென்றுந்தைவமீம்
மானேதொழுகைவலி.

—சிவஞானபோதம்.

(கoக) ஞானயோகிகள் சிவலோகஞ் செல்லும் நெறி.

தெ ய ஏவமேதத்விதுர் யேசாமீ அரண்யே ஶ்ரத்தாகம் ஸத்யமுபாஸதே தே அர்ச்சிரபிஸம்பவந்தி அர்ச்சிஷோஹராஹ்ன ஆபூர்யமாண பக்ஷமாபூர்யமாணபக்ஷாத்யாந் ஷண்மாஸாந்உதங்காதித்ய ஏதி மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யமாதித்யாத் வைத்யுதம் தான்வைத்யுதாந் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகான் கமயதி தேஷு ப்ரஹ்மலோகேஷு பராஃ பராவதோ வஸந்தி தேஷாம் ந புநராவிருத்திஃ।

தெ ய ஏவமேதத்விதுர் யேசாமீ அரண்யே ஶ்ரத்தாகம் ஸத்யமுபாஸதே தே அர்ச்சிரபிஸம்பவந்தி அர்ச்சிஷோஹராஹ்ன ஆபூர்யமாண பக்ஷமாபூர்யமாணபக்ஷாத்யாந் ஷண்மாஸாந்உதங்காதித்ய ஏதி மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யமாதித்யாத் வைத்யுதம் தான்வைத்யுதாந் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகான் கமயதி தேஷு ப்ரஹ்மலோகேஷு பராஃ பராவதோ வஸந்தி தேஷாம் ந புநராவிருத்திஃ।

"பஞ்சாக்கினிவித்தை அறிந்தவர்களும், வனத்திலிருந்து பக்திஞானம்வாயிலாக உபாசிப்பவர்களும், ஒளியை அடைந்து, இதிலிருந்து பகலை அடைந்து, இதிலிருந்து பூருவபக்கமடைந்து, இதிலிருந்து உத்தராயணமடைந்து, இதிலிருந்து தேவலோகத்தை அடைந்து, இதிலிருந்து ஆதித்தியலோகத்தை அடைந்து, இதிலிருந்து மின்னலை அடைய, அங்கே ஓர் அமானவன் வந்து அவர்களைப் பிரஹ்மலோகத்துக்கு (சிவலோகத்துக்கு) நடாத்தச் சென்று அங்கே போய்ப் பெரியோராய் நீடு வசிக்கின்றார்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை" என்று பிருகதாரணியோபநிடதம் (அ.உ.கரு) கூறுகின்றது.

ஸூர்ய த்வாரேண தே விரஜாஃ ப்ரயாந்தி।

ஸூர்ய த்வாரேண தே விரஜாஃ ப்ரயாந்தி।

"அவர்கள் துகளிலாய்க் கதிரோன் வழியே செல்கின்றார்கள்" என்று முண்டக (சு. உ. கக) சுருதியும்,

ஊர்த்வமேகஃ ஸ்திதஸ் தேஷாம் யோ பித்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்॥

"அவைகளுள்ளே ஒன்று மேற்கொண்டு சூரியமண்டலத்தைப் பிளந்து போகின்றது; அதனால் அவன் பிரஹ்மலோகத்தை அடைந்து மேலான கதியை அடைகின்றான்" என்று யாஞ்ஞவற்கிய ஸ்மிருதியும் கூறுகின்றன.

ஆதிக்கணன்முகத்திலொன்றுசென்று
வல்லாதசொல்லுரைக்கத்தன்கைவாளாற்
சேதித்ததிருவடியைச்செல்லநல்ல
சிவலோகநெறிவகுத்துக்காட்டுவோனே
மாதிமையமாதொருகூறுயினானே
மாமலர்மேலயனோடுமாலுங்காணா
நாதியைநம்பியைநள்ளாற்றானே
நானடியேனிங்கப்பெற்றுய்ந்தவாறே.

—நா, திருநள்ளாறு.

அங்கதிரோனவனியண்ணலாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகொண்மி
னங்கதிரோனவனியுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே.

—நா, திருச்சோற்றுத்துறை

(ஈகஂ) சிவபெருமானுக்குள்ள ஸ்திரமாகிய மூர்த்தங்கள்போல, உபாசகர் சிவலோகத்திற் கொள்ளும் உருவங்களும் கேடில்லாதன.

ஸ்திரைரிரங்கைஃ புருரூப உக்ரஃ।

ஸ்திரேபிரங்கைஃ புருரூப உக்ரஃ।

—இருக்குவேதம், உ. ஈஈ. ஊ.

"உக்கிரர் (சிவபெருமான்) ஸ்திரமாகிய அங்கங்களோடு பல ரூபமுடையர்."

க்ருபயைவ மஹேஶ்வர தத்தத்காலோசிதம் த்ருவம்।

ஸ்திராஶ் சைதாஃ ஸ்திரஸ்யாஸ்ய ஸ்திரேபிரிதிஹி ஶ்ருதிஃ।

ஸ்வதந்த்ரஶக்திமத்யஸ்மிந்ஹேதுஸ் ஸாவதிவாதிகஃ।

ந திஷ்டத்யப்ரதிஷ்டாநாத் தர்க்கஸ்யச விஶேஷதஃ।

அதோந்யதாஹி வேதாந்தைர் வீர்யாணஞ்ச ஸ்ம்ருதிஃ கதம்।

குதோபஹதபாப்மத்வாத்யஷ்டதர்மா அநாக்ருதிஃ॥

—உபதேசகாண்டம்.

"ஆதியிலே ஆன்மா மோக்ஷமடையும்பொருட்டு அவ்வக் காலங்களுக்கியைய வியாபகராகிய சிவபெருமானால் (மஹேசுவர மூர்த்தங்கள்) நிச்சயமாய்க் கிருபையினாலே கொள்ளப்பட்டனவே;

அவர் ஸ்திரர் (நித்தியர்) ஆதலின் அவரது மூர்த்தங்களும் ஸ்திரமாயுள்ளன என்று கூறிற்றுச் சுருதி; சுவதந்திர சக்தியையுடைய இந்தச் சிவபெருமானிடத்துக் காலவரைக்குட்பட்டவர் என்று ஊகிக்கும் தர்க்கமானது விசேஷமாய் அநுமானத்துக்கு நில்லாமை பற்றி நிலைக்கமாட்டாது; இங்ஙனமல்லாவிடின் உபநிடதங்களால் வீரியங்களுடையவர் என்றும், அபகதபாப்மத்துவாதி (சாந்தோக்கியோபநிடதம், அ. க. நு) எண்குணங்களுடையர் என்றும் சுருதிகூறுதற்கு இடம் எங்ஙனமாம்?

கையார்கடனைகைக்காரோணம்மேய
நரையார்விடையாரூர்வியுஞ்சம்பந்த
னுரையார்தமிழ்மாலைபாடும்மவரெல்லாங்
*கரையாவுருவாகிக்கலிவானடைவாரே.

—ஞா, திருநாகைக்காரோணம்.

(ககக) இரு பற்றும் அற்றவர்க்குச் சிவபெருமான் அத்துவிதமாதல்.



ஹொரஜுநஂ வாரூரொவொதி தவிஷ்ணோஂ வரூஂ வதீ।
ஸோத்வநஂ பாரமாப்நோதி தத்விஷ்ணோஂ பரமம் பதம்।

"அவன் அத்துவாவின் கரையை அடைகின்றான்; அது சிவனுடைய (பரமாகாய) பரமபதம்" என்று கடவல்லியுபநிடத (கூ. சு) மும்,

கலாதத்வஞ்ச புவநம் வர்ணம் பதமதஂ பரம்।
மந்த்ரஸ்சேதி ஸமாஸேந ஷடத்வா பரிபட்யதே॥

"கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்னும் ஆறும் தொகுப்புற ஷடத்துவா எனப்படுகின்றது" என்றும்,

---

* ஸ்திரமாகிய வடிவம்.

ஶ்ரீஜ்ஞாவஸ்ய வதோஸ்ய வணஃஸ்யைவேதி ஸுவ்ரதஃ।
ஹம்ஸ நாஸ்யஸ்ய தஸ்யாஸ்ய கலாஸ்ய வாஸ்யஃ க்ரமாத்॥

மந்த்ராத்வாச பதாத்வாச வர்ணத்வாசேதி ஸப்ததஃ।
புவநாத்வாச தத்வாத்வா கலாத்வா சார்த்ததஃ க்ரமாத்॥

"மந்திரம், பதம், வர்ணம் என்பன சப்தாத்துவா எனவும், புவனம், தத்துவம், கலை என்பன அர்த்தாத்துவா எனவும் படும்" என்றும் வாயுசங்கிதையும் கூறுகின்றது.

இதனால் மந்திரமுதலிய மூன்றும் ஒலி வடிவம், எனவும், புவனமுதலிய மூன்றும் பொருள் வடிவம் எனவும் ஓர்க.

இவற்றுட் புவனம் தத்துவத்தைப்பற்றி நிற்கும்; தத்துவம் கலையைப்பற்றி நிற்கும். வர்ணம் பதம் மந்திரம் என்னும் (ஒலிவடிவாகிய) மூன்று அத்துவாக்களும் (பொருள்வடிவாகிய) புவனத்திற்றோன்றிய சரீரங்களைப்பற்றி நிற்கும். இதுபற்றியே, சர்வாத்துமசம்புசிவாசாரியர்

(வணஃவஸ்ஜ்ஞாதஸ்ய நஸ்யைவ ஸ்ரீ நஸ்வரூபவாஃ) வதஷ்ட ஹம்ஸ நாஸ்ய தஸ்யாஸ்ய நிரஸ்ரீகரீவத்தஃதெ|ஸவஜ்ஞகும் கலாரஸ்ரீகரீ வத்தஃதெ | வணஃவஸ்ஜ்ஞஸ்யைவ ஸ்ரீநா ஹம்ஸ நஜஸ்ரீராவெக்ஷயாவத்தஃதெ॥

(வர்ணபத மந்த்ராத்மநஸ்த்ரயோத்வாநஸ்ஸப்தரூபாஃ) ஏதேஷாஃ புவநாத்வா தத்வாத்வாநமாஸ்ரித்ய வர்த்ததே । ஏவம் தத்வம் கலாமாஸ்ரித்ய வர்த்ததே । வர்ணமதமந்த்ரத்ரயோத்வாநோ புவநஜஸ்ரீராபேக்ஷயா வர்த்தந்தே॥

என்று கூறினர்.

இந்த ஆறு அத்துவாக்களும் ஆன்மாக்களுக்குப் பந்தமாயிருக்கும். இந்தப் பொருள் ஒலிவடிவினவாய அத்துவாக்கள் ஆன்மாக்களுக்குப் பந்தமானமைக்குக் காரணம் என்னை எனிற் கூறுதும்:—

ஆன்மாவைச் செம்பிற் களிம்புபோல அநாதிக்கண்ணே பந்தித்தது மூலமலமோகம். இந்த மூலமலமோகமானது பெரிய

அந்தகாரத்தையும் ஊழிகாலத்துக் கதிரொளி என்னுமாறு மிகவும் அவாவே சொரூபமாயுள்ளது. இந்த மோகமாகிய அவாவானது புகழ்ப்பற்றும் பொருட்பற்றும் என இருவகைப்படும். புகழ்ப் பற்றுனது ஒலியைப்பற்றியது; பொருட்பற்றுனது பொருளைப் பற்றியது. வண்ணான் ஆடையின் அழுக்கைச் சாணம் உவர்மண் முதலிய அழுக்கைக்கொண்டு நீக்குமாறு போல, சிவபெருமான் ஆன்மாவைப்பற்றிய புகழாசை பொருளாசை என இருதிறப் பட்ட மூலமலத்தை ஒலிவடிவும் பொருள்வடிவுமாகிய மாயேயமல மாகிய இருபிரகாரத்ததாகிய அத்துவாவை மருந்தாகக்கொண்டு தீர்ப்பார். ஆண்மாவுக்கு இருவினையொப்பு மலபரிபாகம் என்பன சிவபுண்ணியமிகுதியினல் எய்திய காலத்து, ஞானசாரியர்வாயி லாக அத்துவசுத்தி செய்யப்பெற்று அவ்வான்மாவானது 'புகழ்ச் சியைக்கடந்தபோகமே' என்று அருளிச்செய்யப்பட்டவாறு பொ ருட்சார்பு புகழ்ச்சார்பாகி இருபற்றும் அற்றுப்போகத் தன்னி டத்துச் சிவம் இரண்டற நிற்றலாகிய அத்துவிதபரபோகம் விளை யப்பெறும். பட்டினத்தடிகள் இருவகை அத்துவாக்களின் எல் லையையும் அருட்கண்ணுற் கடந்து, அதுகாரணமாக அறிவுஞ் செயலுமிழந்து, அதனுற் றம்மை மறந்துசிவத்தை நாடி நிற்கும் அன்பருள்ளக்கண்ணுக்கு அச்சிவம் புலப்படும் என்று கொண்டே,

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து
தம்மைமறந்துநின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுநட
மாமேம்பலவாண.....

---பதிஞெராந்திருமுறை.

என்றருளிச்செய்தார். ஈண்டு உரை என்றது சப்தாத்துவா வையும், பொருள் என்றது அர்த்தாத்துவாவையும் சுட்டியவாம் எனக.

வெற்றவேயடியாரடிமிசைவீழ்விருப்பினன்வெள்ளைநீறணியுங் கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொ *டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. [ழிந்திட்

—ஞா, திருவாலவாய்.

---

* புகழ்ப்பற்று பொருட்பற்று என்னும் இருவகைப்பற்றும் அற்றவரி டத்தில் இரண்டற்று அத்துவிதமாய் விளங்குபவர் சிவபெருமான்.

அப்பொற்பதிவாழ்வணிகக்குலத்தான்றதொன்மைச்
செப்பத்தருசீர்க்குடிசெய்தவஞ்செய்யவந்தா
ரேப்பற்றினையுமறுத்தேறுகைத்தேறுவார்தாண்
மெய்ப்பற்றெனப்பற்றிவிடாதவிருப்பின்மிக்கார்.

அப்பொற்பதியினிடைவேளாண்குலத்தைவிளக்கவவதரித்தார்
செப்பற்கரியபெருஞ்சீர்த்திச்சிவனுர்செய்யகழற்பற்றி
யேப்பற்றினையுமறவேறிவாரெல்லைதெரியவொண்ணுதார்
மெய்ப்பத்தர்கள்பாற்பரிவுடையாரெம்பிரானுர்விறன்மிண்டர்.

—பெரியபுராணம்.

(ககஉ) ஞானம்.

வவெ-ழ்வெவ ஹி ஸாஷ்வெஷ-ஜ்ஜேயம் வஸ்து சதுஷ்டயம்।
வஸ-வாஸவதிஸ்வெவ ஸிவஸ்சேதி யதாக்ரமம்।
பதிஸ் ஸதாஸிவோ ஜ்ஞேயோ மந்த்ராத்மா மந்த்ரவிக்ரஹஃ।
ஸர்வமந்த்ராதிபஸ்சாஸௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகஃ॥

ஸர்வேஷ்வேவ ஹி ஸாஸ்த்ரேஷ-ஜ்ஜேயம் வஸ்து சதுஷ்டயம்।
பஸு-பாஸபதிஸ்சைவ ஸிவஸ்சேதி யதாக்ரமம்।
பதிஸ் ஸதாஸிவோ ஜ்ஞேயோ மந்த்ராத்மா மந்த்ரவிக்ரஹஃ।
ஸர்வமந்த்ராதிபஸ்சாஸௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகஃ॥

"சர்வசாஸ்திரங்களினும் பசு பாசம் பதி சிவம் என்னும் நான்கு வஸ்துக்களும் கிரமமாக அறியற்பாலன; பதியாவார் சதாசிவர்; இவர் மந்திரான்மாவும், மந்திரவடிவினரும், சர்வமந்திரங்களுக்கும் அதிபரும், சிருஷ்டி (ஸ்திதி) சங்கார (திரோபவ அநுக்கிரகம்) என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவருமாயுள்ளார்" என்று சர்வஜ்ஞோத்தரம் கூறுகின்றது.

கூவ-ரமெவா கூவ்ய விஸஜ-நெநாயா கொ
வெஷ யத சூவஹமெவ। யொஸவ்யாஜ்யக்ஷஃ வாரெ
வ்யாஜெநா கூம்பவெஷ யதிவா நவெஷ॥

அர்வாக் தேவா அஸ்ய விஸர்ஜநேநாதா கோ வேத
யத ஆபபூவ । யோஸ்யாத்யக்ஷः பரமே வ்யோமந் ஸோ
அங்கவேத யதிவா நவேத ॥

—இருக்குவேதம், க0. க்உகூ. சூ. எ.

''தேவர்கள் உலக சிருஷ்டிக்குப் பின்னர்த்தான் உளராயினர்கள்; அங்ஙனமாயின் அது எங்கிருந்து உளதாயிற்று என்று யார் அறிவார்'' என்று வினவி, ''பரமவியோம (திருச்சிற்றம்பல)த்தின்கண்ணே எவர் பிரபஞ்சத்துக்கு அத்தியக்ஷராய் (அதிபதியாய்) நின்றாரோ, அவரே அதனை அறிவார்; மற்றெவரும் அறியார்'' என்று உத்தரம் இறுத்தது இருக்குவேதம். இதனைச் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியஞ் செய்பவர் பரமவியோமத்திலுள்ள அத்தியக்ஷர் என்று பெறப்படுகின்றது. அந்த அத்தியக்ஷர் யாரெனின்,

ய வஷொ2ஜ்ஞ ஹ்ருதய ஆகாஶஸ்மிந்ஹிதே
வஸ்வவஶீ ஸர்வஸ்யேஶாநஸ் ஸர்வஸ்யாதிபதிः।

ய ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிந்சேதே ஸர்
வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶாநஸ் ஸர்வஸ்யாதிபதிः।

''எது இதயத்துள் ஆகாயமாய்த் (திருச்சிற்றம்பலமாய்) இருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத்துக்கும் அதிபதியும் அனைத்துக்கும் ஈசானருமாயினர் அமர்கின்றார்'' என்று பிருகதாரணியம் கூறுமாற்றால், பரமவியோமத்தினர் ஈசானர் என்று பெறப்படுகின்றது. அந்த ஈசானர் யாரெனின்,

ஓ3ம்ஶா நஸ்2 பாத்வம்ஹஸः வஸூநாம்ருத்3ரா தீ3க்ஷாம் வாசं।
ஸுஹவமேஜ் ஶ்ரவம் விஶ்வாஸூதிமிந்த்3ரꣳ ஸுபாத்3ரம் விவாஸேயं।
ஆஶாஸாநா ஸௌமநஸமுதாஸ்ய ரேவந்நஸ்தாத்3 விஶ்வாஸாம் விஶः।
ஸ நः ஸுபாத்3ரஸ்ஸாக்ஷாதி3வமுதவை ஜமஸ்2யாः॥

ஈஶாநம் ப்ருத்தரூபந்து பஞ்சமந்த்ராத்மகம் பரம்।
ப்ரஹ்மேசாந்தே ஶிவம் விக்யாதூர்த்வே ப்ருத்தம் விசிந்தயேத்।
த்வாதஶாந்தாத் பரோ யஸ்மாத திஸூக்ஷ்மஸ்திதோ விதுः।
ஆநந்தப்ருத்தகஸ் ஸாக்ஷாத் தேவதேதேவோ ஜகத்குருः॥

"பஞ்சமந்திரான்மகபரராகிய ஈசானரைத் தாண்டவேசுவரர் என்றும், பிரமரந்திரத்திலே (சாதாக்கியதத்துவச்) சிவன் உளரா யினர் என்றும் அறிக; அவர்க்கு மேலுள்ள (சமஷ்டிரூப சதாசிவ) தாண்டவேசுவரரைத் தியானிக்க; துவாதசாந்தத் துக்கு மேலுள்ளாராதலில் அவர் அதிசூக்குமவடிவினர் என்று அறிகின்றார்கள்; அவர் நேரே தேவதேவரும், ஜகத்குருவுமாகிய ஆனந்தாண்டவேசுவராம்" என்று காரணாகமம் கூறுகின்றது. ஆகவே, இருக்குவேதத்துக் கூறப்பட்ட பரமாகாயத்து அத்தி யகூஷர் சூக்குமவடிவினராகிய சமஷ்டிரூப மகாசதாசிவ தாண்ட வேசுவராம் என்க.

ஶிவவஸ்து வரமந்த்ரமந்த்ரா தீதோ நிரஞ்ஜநஃ|
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ||

ஶிவவஸ்து பரம்தஸ்மாந்மந்த்ராதீதோ நிரம்ஜநஃ|
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ||

"சிவப்பொருளானது பரவடிவாகும்; ஆகலின், அவ்வஸ்து மந்திராதீதமாய், மலமிலதாய், நிராமயமாய், நிராதாரமாய், வர்ணம் வடிவம் இல்லாததாயுள்ளது. ஆகவே, மாயாவாதிகளது விமல சத்துவப்பிரதான மூலப்பிரகிருதி மாயோபாதிகனும் கற்பித ஆபாசனுமாகிய தாழ்ந்த ஈசுரசகுணவழிபாட்டினுயர்ந்து, (சர்வ சாரமுதலிய ஏகான்மவாதோபநிடதப்பிரகாரம்) மூலப்பிரகிருதி கடந்துள்ள ஆன்மப்பிரமசிவம் வேறு என்றும், மூலப்பிரகிருதி கடந்து, அதற்கப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்தப்பாலுள்ள பரப்பிரகிருதிப்பாலராய், நித்தியராய், சூக்குமவடிவினராயுள்ள திருச்சிற்றம்பலவரது ஸ்தானத்தில் உயர்ந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாக ஈண்டுக் கூறப்பட்ட அதி காரவர்ச்சித சிவப்பொருள் வேறு என்றும் ஓர்க.

மைப்படிந்தகண்ணுளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லா
*ஞெப்புடையனல்லனெருவனல்ல
ஞெரூரனல்லனேருவமனில்லி
யப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளேகண்ணுகக்காணினல்லா
லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டோணுதே.

—நா, விஞ்விடைத்திருத்தாண்டகம்.

---

*ஒப்புடையனல்லன் என்றற்றொடக்கத்தவற்றுற் சிவத்தின் சொரூப நிலை உணர்த்தப்பட்டது.

இன்னவுருவின்னநிறமென்றறிவதேலரிதுநீதிபலவுந்
தன்னவுருவாமெனமிகுத்ததவனீதியொடுதானமர்விட
முன்னைவினைபோய்வகையினன்முழுதுணர்ந்துமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசேரும்வயல்வைகாவிலே.

—ஞா, திருவைகாவூர்.

கோள்ளுங்கில்லெனையன்பரிற்கூய்ப்பணி
கள்ளும்வண்டுமறுமலர்க்கொன்றையா
னள்ளுங்கீழுளுமேலுளும்யாவுளு
மெள்ளுமெண்ணெயும்போனின்றவேந்தையே.

—திருவாசகம்.

ஆயினும்பெரியாரவரென்பது
மேயவிவ்வியல்பேயன்றிவிண்முதற்
பாயபூதங்கள்பல்லுயிரண்டங்க
ளேயும்யாவுமிவர்வடிவென்றதாம்.

பின்புமாரறிவாரவர்பெற்றியை
யென்பதியாருணர்வானுஞ்சென்றெட்டொணு
மன்பெருந்தன்மையாரென்வாழ்த்திரு
ரன்புசூழ்சண்பையாண்டகையாரவர்.

—பெரியபுராணம்.

தஜிதம் த்ரிவிதம் ரூபம் ஸ்தூலம் சூக்ஷ்மம் ததஃ பரம்।
அஸ்மதாத்யமரைர் த்ருஸ்யம் ஸ்தூலம் ஸூக்ஷ்மந்து யோகிபிஃ।
ததஃ பரந்து யந்நித்யம் ஜ்ஞாநமாநந்தமவ்யயம்।
தந்நிஷ்டை ஸ்தத்பரைர்பக்தைர் த்ருஸ்யந் தத்ரூபமாஸ்திகைஃ।
பஹ்நாத்ர கிமுக்தேந குஹ்யாத் குஹ்யதமம் பரம்।
ஸிவே பக்திர் நஸந்தேஹஸ்தயா யுக்தோ விமுச்யதே॥

"சிவபெருமானுக்குஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரவடிவம் என மூவடிவங்கள் உள்ளன; திருசியமாகிய ஸ்தூலவடிவம் அமரர்களாகிய எங்களானும், சூக்குமவடிவம் (வைதிகபாசுபத)ஞான யோகிகளானும், ஞானாதீத அவ்வியயமாகிய அந்தப் பரவடிவம் சிவநிஷ்டர்களாய், சிவபரர்களாய், சிவாஸ்திகர்களாயுள்ள பக்தர்களாலும் காணற்பாலன; ஈண்டு அதிகஞ்சொல்லி என்! பரவடிவம் மறைவினும் மறைவாய் உள்ளது; எவனுக்குச் சிவனிடத்திலே அன்பு சந்தேகமின்றி உளதோ, அவன் அவ்வன்பினூடியைந்து வீடுறுகின்றான்" என்றது சிவபுராணம். சர்வஞ்ஞானேத்தரத்திற் கூறப்பட்ட அதிகாரவாச்சித சிவப்பொருளின் சொரூபமே ஈண்டு பரவடிவம் எனப்பட்டது. இது கேவலாவஸ்தை சகலாவஸ்தை என்னும் இரண்டும் நீங்கியவிடத்தே எய்தற்பாலது.

நதிநே பூஜயேத்தேவம் ராத்ரௌ நைவச நைவச।
ஸந்ததம் பூஜயேத் தேவம் திவாராத்ரௌச வர்ஜயேத்।

நதிநே பூஜயேத் தேவம் ராத்ரௌ நைவச நைவச।
ஸந்ததம் பூஜயேத் தேவம் திவாராத்ரௌச வர்ஜயேத்।

"பகல் எனப்படும் சகலாவஸ்தையிற் சிவனை வழிபடற்க; இரவு எனப்படும் கேவலாவஸ்தையில் அவரை வழிபடற்க; பின் கேவலசகலமொழிந்து எஞ்ஞான்றும் சுத்தாவஸ்தையில் அவரை வழிபடுக" என்று கூறிற்றுச் சிவாகமம்.

உறவியுமின்புறுசீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
*மறவியுஞ்சிந்தனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரான்பெரும்புலியூர்பிரியாரே.

—ஞா, திருப்பெரும்புலியூர்.

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

—திருவாசகம்.

---

* மறவி சிந்தனை என்றமையானும், கரந்து பரந்தது என்றமையானும், இரா பகல் என்றமையானும், நினைப்பு மறப்பு என்றமையானும் கேவலசகலாவஸ்தைகள் குறிக்கப்பட்டன.

இராப்பகலற்றவிடத்தேயிருந்து
பராக்கறவானந்தத்தேதறல்பருகா
திராப்பகலற்றவிறையடியின்பத்
திராப்பகன்மாயையிரண்டடித்தேனே.

நினைப்புமறப்புமிலாதவர்நெஞ்சம்
வினைப்பற்றறுக்கும்விமலனிருக்கும்
வினைப்பற்றறுக்கும்விமலனைத்தேடி
நினைக்கப்பெறிலவனீளியனுமே.

—திருமந்திரம்.

வாஹ்யாப்யந்தரே சிவம் பசுஜ்ஞாத்வா ததோ யஜேத்|
ஏகிராப்யதரே யஸ்ய ந வாஹ்யே வர்ணயேத்பவாத்|
ந கர்மகரணீயம் ஹி பஹிஸ்தஸ்ய மஹாத்மநஃ|
ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய பக்த்யாசைவ சிவாத்மநஃ|
நாஸ்தர்நச பஹிஃ க்ருஷ்ண க்ருத்யமஸ்தி கதாசந||

"புறப்பூசையினும் சிவத்தை வழிபட்டு, பின்னர் அந்தரியாகத்திலே விருப்பமுடையனுகின்றன்; புண்ணியமிகுதியினுல் அந்தரியாகத்தினும் புறப்பூசையினும் பற்றிலனுகின்றனே, அந்த மகாத்துமாவுக்குப் புறத்தே செயற்பாலதொன்றுமின்று; ஞானமிர்தத்தினலும் பக்தியினலும் திருப்தியுடையனுகிய சீவன்முக்தனுக்கு அகத்தும் புறத்தும் ஓர்காலும் செய்யவேண்டியதொன்றுமின்றும்" என்று சிவபுராணம் கூறுகின்றது.

உள்ளும்புறம்புநினைப்பறினின்னுள்ளே
மொள்ளாவமுதமென்றுந்தீபற
மூளியாதுபந்தமென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

(இ-ள்) சகமார்க்கம்போலப் பரவடிவாகிய சிவப்பொருளை ஏக தேசப்படுத்தி உள்ளே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் வழிபடுவதும், தாதமார்க்கம்போற் புறத்தே வழிபடுவதும் ஒழித்து, சன்மார்க்கமுறையாகிய சுத்தாவஸ்தையைத் தலைப்பட்டு, அகண்டாகார நித்தவியாபகசச்சிதானந்த சொரூபநிலையை அறிந்து ஒருவர் வழிபடின், அவ்வன்பர் அறிவின்கண்ணே பருகத் தொலையாப் பரபோகம் விளையும்; அது விளையவே பாசங்கள் மூலக்கமாட்டாவாம் ஏ–ஐ.

இரவுபகலில்லாவின்பவெளியூடே
விரவிவிரவிநின்றுந்தீபற
விரையவிரையநின்றுந்தீபற.

(இ-ள்) கேவலசகலாவஸ்தைகளிற் புசிக்கும் சிற்றின்பம் போலன்றி, "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போக்கம் பின்னும் புதிதா"கலின், அந்த இன்பபூரண வெளியாகிய சிவத்துடனே புணர்ந்து விரவி ஒன்றேயாகி நிற்குமாயினும், அந்தச் சிவானுபவத்தில் விரைந்துநின்று உணர்வதொரு பொருளுண்டாகலின் அவ்விடத்து அது உண்டு இல்லை என்று பேசுதற்கில்லையாம் என்றே கொள்ளப்படும். ஆன்மா அவ்விடத்து உண்டென்னில், ஞாதிரு ஞான ஞேயம் என்னும் சங்கற்பவிகற்பங்கள் உண்டாம்; அவ்விடத்து ஆன்மா என்றொரு முதல் இல்லை என்னில், அது சற்காரியமாகிய மெய்ப்பொருள் என்பதற்கு இழுக்காகி அநித்திய பதார்த்தங்களில் ஒன்றுகும்; அதனை ஒன்று என்றும் இரண்டு என்றும் பகுத்தறியின், அவசித்தாந்தமாகும்; ஆன்மா என்று ஒரு முதல் ஆண்டு உண்டென்பதும் இல்லையென்பதுமின்றி அந்தப் பேரானந்த சிவபோகத்தைப் பொருந்துமுறைமையை ஆராயின், அந்தச் சிவபெருமான் "ஏகமாய் உள்ளத்தின்கண்ணனை உள்கு வாருள்கிற்றை உள்ளத்தாற் காணலை வும்மு" என்றும், ஆன்ம ஞானத்தினிடத்து ஏகமாய் விட்டுநீங்காதவராகலான், கருதுவார் கருதிய பொருளாகிய தம்மை அவர் அறிவோடு கூடிநின்றறியார்கொல்லோ என்றும் வருமாற்றால், அவ்விடத்து ஆன்மாவைத் தாமாகும்வண்ணஞ் செய்து, அவ்வின்பத்தை உயிர் அறியும்பொருட்டு உடனுய்நின்று அறிவர் ஏ - ஐ.

பொன்வாண்முன்கொண்மூவிற்புக்கொடுங்கிப்போயகலத்
தன்வாளியெங்குமாந்தன்மைபோன்–முன்வாண்
மலத்துண்மறைந்துள்ளமற்றுலகையுண்ணு
மலத்திரித்துச்செல்லும்வரத்து.

—சிவஞானபோதம்.

இதன் பொருளைச் ''சிவஞானபோதவசனாலங்காரதீப''த்தி கை–ஞ் சூத்திரத்து கூஈ–ம் பிரிவிற் காண்க.

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானெடிதான்முகன்வானவர்கண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குசின்றுன்வந்துமுந்துமினே.

—திருவாசகம்.

ஈண்டு மூலபண்டாரம் என்றது போனந்தசிவபோசுத்தின் மேற்று. இதனை அடையுநெறி வருமாறு.—

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காய்ச்
சென்றுமெதாழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே.

—ஈா, கோயில்.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

எண்ணெண்றினினைந்தவர்தம்பா
லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு
பண்ணின்றெழிசெய்பனையூரே.

—ஞா, திருப்பனையூர்.

ஏகமாய்நின்றேயினையடிகளோன்றுணரப்
போகமாய்த்தான்விளைந்தபோற்பிஞ—னேகமா
யுள்ளத்தின்கண்ணுளுள்குவாருள்கிற்றை
யுள்ளத்தாற்காணுமேவுற்று.

—சிவஞானபோதம்.

பரபோகானந்தமும் ஆனந்தக்கூத்தும் ஒன்றமெனல்.



உணர்வுநேர்பெறவருஞ்சிவபோகத்தையொழிவின்றியுருவின்க
ணணியுமைம்பொறியளவினுமெளிவரவருளினெனப்போற்றி
யிணையில்வண்பெருங்கருணையேயேத்திமுன்னெடுத்தசொற்பதிக
புணருமின்னிசைபாடினாடினர்பொழிந்தனர்விழிமாரி. [த்திற்

எவ்வுலகுமுய்யவெடுத்தருளியசேவடியாரைச்
செவ்வியவன்புறவணங்கிச்சிந்தைகளிவரத்திளைத்து
வவ்வியமெய்யுணர்வின்கண்வருமானந்தக்கூத்தை
யவ்வியல்பிற்கும்பிட்டங்காராமையமர்ந்திருந்தார்.

பாவுவாய்குளறிக்காதல்படிதிருப்படியைத்தாழ்ந்து
விரவுமெய்யங்கமைந்துமெட்டினும்வணங்கிவேட்கை
யுரனுறுதிருக்கூத்துள்ளமார்தரப்பெருகிநெஞ்சிற்
கரவிலாதவரைக்கண்டுநிறைவுதங்கருத்திற்கொள்ள.

பண்ணுர்பதிகத்திருக்கடைக்காப்புப்பரவி
யுண்ணுடுமென்புமுயிருங்கரைந்துருக்கும்
விண்ணுயகன்கூத்துவேட்டவெளியேதிளைத்துக்
கண்ணுரமுதுண்டார்காலம்பெறவழுதார்.

அண்ணலார்தமக்களித்தமெய்ஞ்ஞானமேயானவம்பலமுந்த
முண்ணிறைந்தஞானத்தெழுமானந்தவோருபெருந்தனிக்கூத்துங்
கண்ணின்முன்புறக்கண்டுகும்பிட்டெழுங்களிப்பொடுங்கடற்காழி
புண்ணியக்கொழுந்தணையவர்போற்றுவார்புனிதராடியபொற்பு. [ப

—பெரியபுராணம்.

புதியையாயினியையாம்பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்வித்தணைமதித்திட்டமதிகங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானே.

—நா, திருப்பழனம்.

மெய்யுணர்வு எனப்படும் அருளின் எல்லையாகிய துரியங்கடந்த பின்னர்த் துரியாதீதத்துச் சிவபோகம் என்பப்படும் ஆனந்தக்கூத்து எய்துவதாமாதலின், "உணர்வுநேர்பெற வருஞ்சிவ லோகத்தை" என்றும், "மெய்யுணர்வின்கண்வருமானந்தக் கூத்து" என்றும், "உரனுறுதிருக்கூத்து" என்றும், "மெய்ஞ் ஞானமேயானவம்பலமுந் தம்முண்ணிறைந்த ஞானத்தெழுமானந் தவோருபெருந்தனிக்கூத்தும்" என்றும் கூறப்பட்டதாம்.

ஆனந்தத்தை ஆன்மாவுக்கு விளைவிப்பவர் சிவபெருமான்.

சூநம்ஷொ ஐஹ்ரு
ஆநந்தோ ப்ரஹ்மம்।

"ஆனந்தகுணமுடையது பிரஹ்மம்" என்றும்

கூஷ்யாஹ்ரு சூதாநம்ஷ்யஃ।
அந்யோந்தர ஆத்மாநந்தமயஃ।

"அந்நத்துக்கும் வேறாய் உள்ளே உள்ள (பரம) ஆன்மாவாகிய சிவபெருமான் ஆனந்தமிகுதியுடையர்" என்றும்,

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்தஃ।

"அது பிரஹ்மத்தின் ஒரு ஆனந்தம்" என்றும்,

ஏஷஹ்யேவாநந்தயாதி।

"இவரன்றே (ஆன்மாவுக்கு) ஆனந்தத்தை விளைவிப்பவராகின்றார்" என்றும்,

ஏஸம் லப்த்வாநந்தீ பவதி।

"பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாகின்றான்" என்றும்,

சூநம்ஷ்ம் ஐஹ்ரணோ விதுஷஷ்விஷ்கி கூதஶ்ந।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி குதஶ்சந।

"பிரஹ்மானந்தத்தை (அநுபூதியில்) அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன்" என்றும் தைத்திரீயசுருதியும்,

சூநம்ஷ்யொஹ்ராவாஸ்।
ஆநந்தமயோப்யாஸாத்।

"(சிவபெருமான்) ஆனந்தமயர்; *அப்பியாசத்தினால்" என்றும்,

---

*தைத்திரீய சுருதி ஆனந்தமிகுதியுடைய பரப்பிரஹ்மசிவனுடைய ஆனந்தத்தை ஆராய்வதாகத் தொடங்கி, மனுஷ்யானந்தத்தை மூதற் கண்ணே கூறி, அதினும் நூறுமடங்கு மனுஷ்யகந்தருவானந்தம் என்றும், அதினும் நூறு மடங்கு தேவகந்தருவானந்தம் என்றும், இங்ஙனம் இந்திரன், பிருகஸ்பதி, பிரமா என்போருடைய ஆனந்தங்களும் ஒன்றுக்கொன்று நூறுநூறுமடங்காம் என்றும் கூறி, அவற்றிற்குமேற் பிரஹ்மானந்தத்தைக் கூறினமைபற்றி "அப்பியாசம்" என்று கூறப்பட்டது.

தஜ்ஜன்வயவதிரேகாப்யாம்।

தத்தேதத்வ்யபதேசாச்ச।

"அவர் (சிவபெருமான்) அதற்கு (ஆனந்தம் விஞ்ஞானத்திற்கு) ஏதுவாகக் கூறப்படலானும்" என்றும்,

விகாரசப்தான்நேதிசேந்ந ப்ராசுர்யாத்।

விகாரசப்தாந்நேதிசேந்ந ப்ராசுர்யாத்।

ஆனந்தமயத்தில் விகாரம் எனப் பொருள்படுகின்ற மயம் என்னும் சப்தமுண்மையின், ஆனந்தமயம் பிரஹ்மமன்றும் என்று ஆக்ஷேபிக்கின், அது (பொருந்துவ) தன்று; அந்த மயம் என்பது மிகுதி என்னும் பொருட்டாமாகலின் என்றும் வேதாந்தசூத்திரமும்,

ரஸோவை ஸஃ ரஸம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா।

ரஸோ ப்ரஹ்மரசம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா।

"பிரமம் ஆனந்தகுணமுடையது; அந்தப் பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாயிருக்கின்றன்; பிறிதோர் பிரகாரத்தாலன்று" என்று ஆனந்தமீர்த்தமும், ?

ய ஆநந்தமயோப்யாஸாதாநந்தப்ரசுரோயதஃ।

ஆநந்த்யாதாநந்தவிந்நைவ விதேத்யஸ்மா இதம் நமஃ॥

ய ஆநந்தமயோப்யாஸாதாநந்தப்ரசுரோயதஃ।

ஆநந்த்யாதாநந்தவிந்நைவ விதேத்யஸ்மா இதம் நமஃ॥

(தைத்திரீயசுருதியும் இதனை ஆதாரமாகக்கொண்ட வேதாந்தசூத்திரமும்) அப்பியாசத்தினால் எந்தச் சிவன் ஆனந்தமயராயுள்ளாரோ என்றும், ஆனந்தமயம் என்றதில் மயம் என்றது ஆனந்தமிகுதி எனப் பொருள்படுதலின் எவர் ஆனந்தமிகுதியுடையவரோ என்றும், ஆன்மாவுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றாரோ என்றும், (அந்தப்) பிரஹ்மானந்தத்தை அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன் என்றும் கூறுகின்றனவோ, அவ்வியல்பினராகிய உமக்கு நமஸ்காரம்" என்று சுருதியுபப்பிருங்ஹணமாகிய சம்பவகாண்டமும் கூறுகின்றன.

துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனேநண்ணுமின்க
ணன்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானேயேத்துவார்க்கின்பமே.

—ஞா, திருநாலூர்மயானம்.

கண்ணினையலேகண்ணெனறுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுவகைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே.

—ஞா, திருப்பாசூர்.

தேனுமாயமுதாகிநின்றுன்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனுமாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறமுய்யும்வகையதே.

—ஞா, திருமங்கலக்குடி.

தேனிலுமினியர்பாலனீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடி
தொழுவா, ரூனயந்துருகவுவகைகடருவாருச்சிமேலுறைபவரொ
ன்றலாதூரார், வானகமிறந்துவையகம்வணங்கவயங்கொளநிற்ப
தோர்வடிவினையுடையா, ராணையினுரிவைபோர்த்தவெம்மடிகளச்
சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.

—ஞா, திருவச்சிறுபாக்கம்.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே.

—நா, திருவிடைமருதூர்.

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைசெய்து
பருகியூறலைப்பற்றிப்பதமழிந்
தருகிலைபவர்க்கூனமொன்றின்றியே
யருகுநின்றிடுமானைக்காவண்ணலே.

—நா, திருவானைக்கா.

பொறிப்புலன்களோப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்துநினைந்தவர்சிந்தையு
ளறிப்புறும்முழுதாயவனேகம்பங்
குறிப்பினுற்சென்றுகூடித்தொழுதுமே.

—நா, திருக்கச்சியேகம்பம்.

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்லிட்டமாய்த்
திருப்புத்தூரானைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றிலுமண்ணிக்குங்காண்மினே.

—நா, அரிசிற்கரைப்புத்தூர்.

கருகுகண்டத்தன்காய்கதிர்ச்சோதியன்
பருகுபாலமுதேயெனும்பண்பின
னருகுசென்றிலளாவடுதண்டுறை
யொருவனென்னையுடையகோவெண்ணுமே.

—நா, திருவாவடுதுறை.

அருமறையினையாயெனுமெண்ணினைக்
கருவிடம்மிகவுண்டவெங்கண்டனைப்
புரிவெண்ணூலனைப்புள்ளிருக்குவேளூ
ருருகிநைபவருள்ளங்குளிருமே.

—நா, திருப்புள்ளிருக்குவேளூர்.

காமாத்தம்மெனுங்கார்வலைப்பட்டுநான்
போமாத்தையறியாதுபுலம்புவே
ணுமாத்தூரானேயென்றழைத்தலுங்
தேமாத்தீங்கனிபோலத்தித்திக்குமே.

—நா, திருவாமாத்தூர்.

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்போற்கழலீசனேனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

விள்ளத்தானென்றுமாட்டேன்விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநுன்னைவாய்மடுத்துண்டிடாமே
யுள்ளத்தேநிற்றியேனுமுயிர்ப்புளேவருதியேனுங்
கள்ளத்தேநிற்றியம்மாவெங்ஙனங்காணுமாறே.

—நா, தனித்திருநேரிசை.

விரும்பியூறுவிடேன்மடநெஞ்சமே
கரும்பினூறல்கண்டாய்கலந்தார்க்கவ
னிரும்பினூறலருதேதார்வெண்டலை
யெறும்பியூர்மலையானெங்களீசனே.

—நா, திருவெறும்பியூர்.

கங்கைதங்கியசடையுடைக்கரும்பே
கட்டியேபலர்க்குங்களேகண்ணே
யங்கைநெல்லியின்பழத்திடையமுதே
யத்தாவென்னிடரார்க்கெடுத்துரைக்கேன்
சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரல
வயிரமுத்தொடுபொன்மணிவரன்றி
யோங்குமாகடலோதம்வந்துலவு
மொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

பொருங்கைமதகரியுரிவைப்போர்வையானைப்
பூவணமும்வலஞ்சுழியும்பொருந்தினானைக்
கரும்புதருகட்டியையின்னமிர்தத்தைத்தேனைக்
காண்பரியசெழுஞ்சுடரைக்கனகக்குன்றை
யிருங்கனகமதிலாரூர்மூலட்டானத்
தெழுந்தருளியிருந்தானியைமையோரேத்து
மருந்தவனையாநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே.

—நா, திருவாரூராரெறி.

மாலையெழுந்தமதியேபோற்றி
மன்னியென்சிந்தையிருந்தாய்போற்றி
மேலைவினைகளறுப்பாய்போற்றி
மேலாடுதிங்கண்முடியாய்போற்றி
யாலக்கரும்பின்றெளிவேபோற்றி
யடியார்கட்காரமுதமானாய்போற்றி
காலைமுளைத்தகதிரேபோற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகைலாயம்.

அளியானையண்ணிக்குமான்பாறன்னை
வான்பயிரையப்பயிரின்வாட்டந்தீர்க்குந்
தூளியானையயன்மாலுந்தேடிக்காணாச்
சுடரானைத்தூரிசறத்தொண்டுபட்டார்க்
கெளியானையாவர்க்குமரியான்றன்னை
யின்கரும்பின்றன்னுள்ளாலிருந்ததேறற்
றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேரதார்நன்னெறிக்கட்சேராதாரே.

—நா, திருநாகேச்சரம்.

கரும்பிருந்தகட்டிதனைக்கனியைத்தேனைக்
கன்ருப்பினடுதறியைக்காறையானை
யிரும்பமர்ந்தமூவிலைவேலேந்திஞனை
யென்ஞனைத்தென்ஞனைக்காவான்றன்னைச்
சுரும்பமருமலர்க்கொன்றைசூடிஞனைத்
தூயானைத்தாயாகியுலகுக்கெல்லாந்
தரும்பொருளைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாள்போக்கினேனே.

—நா, திருத்தலையாலங்காடு.

சூற்றநம்பிகுறுகாசெயின்மூன்றைக்குலத்தநம்பிசிலையாவரை
கையிற், பற்றுநம்பிபரமானந்தவேள்ளம்பணிக்குநம்பியெனப்
பாடுவதல்லான், மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன்மதியிலியேன்
படுவெந்துயசெல்லா, மெற்றுநம்பியென்னையாளுடைநம்பியெழு
பிறப்புமெங்கணம்பிகண்டாயே.

—சு, திருமுதுகுன்றம்.

தந்ததன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்காவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனொர்கைம்மாறே.

—திருவாசகம்.

கரும்புந்தேனுங்கலந்தேதார்காயத்தி
லரும்புங்கந்தமுமாகியவானந்தம்
விரும்பியேயுள்ளம்வெளியுறக்கண்டபின்
கரும்புங்கைத்ததுதேனும்புளித்ததே.

—திருமந்திரம்.

அடிசார்ந்தவர்க்குமுடியாவின்ப
நிறையக்கோடும்பினுங்குறையாச்செல்வ.

—பதினொராந்திருமுறை.

ஆனந்தவெள்ளத்தினிடைமூழ்கியம்பலவர்
தேனுந்துமலர்ப்பாதத்தமுதுண்டேதெளிவெய்தி
ஊனந்தானிலராகியுவந்திருந்தார்தம்மைக்கண்
டனந்தங்கியதிலதாமென்னவதிசயமென்றூர்.

—பெரியபுராணம்.

பிறவிநோயை அறுக்கும் மருந்தாகிய சிவம் பெத்தகாலமுதல் முத்திகாலம்வரையும் ஆன்மா தன்னோடு உடனின்று அறிவித்தும் அறிந்தும் வரும் பேருபகாரத்தை மறவாது இடையீடின்றிச் சிந்திக்குங்கால், அன்பினிலேயே அதுவாய், பரமானந்தப்பெருஞ் செல்வமே சுயந்திருமேனியாயுள்ள அப்பரம்பொருள் பொறுப்பரிய பேரன்பை அருளி அதன்வழியே எங்குமிலாப் பெரும் போகத்தைப் புரியுமாறு புகுந்திடும்.

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயாவினையாள்வானைப்பாடுதுங்காணம்மானைப்.

—திருவாசகம்.

உன்னுமுளதையமிலதுணர்வாயோவாது
மன்னுபவந்தீர்க்குமருந்து.

—திருவருட்பயன்.

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிலுடனுவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே.

—ஞா, திருவாய்மூர்.

உள்ளமுருகிலுடனுவரல்லது
தெள்ளவரியரென்றுந்தீபற
சிற்பரச்செல்வரென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

சிவபோகச்செல்வர்க்குச் சிவாமிர்தம் தித்தித்தூறல்.

மாறுகொண்டுவலோத்தெழுதுதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசேஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவாட்போக்கி.

ஏறதேறுமிடைமருதீசனூர்
கூறுவார்வினைதீர்க்குங்குழகனூ
ராறுசேஞ்சடைவைத்தவழகனூர்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவிடைமருதூர்.

ஊனெக்குமின்பம்வேண்டியுழலாதே
வானெக்கும்வழியாவதுநின்மினே
தானெக்குந்தன்னடியவர்நாவினிற்
றேனெக்குந்திருவெண்காடடைநெஞ்சே.

—நா, திருவெண்காடு.


தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேதன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவினைந்ததே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே
யன்பொடுதன்னேயஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையுங்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே.

—திருவிசைப்பா.

சிவபோகச்செல்வர்க்கு மயிர்ப்புளகம் ஆனந்தபாஷ்பம் பரவசப்பட்டுவீழ்தல் உளவாதல்.



புளிக்கண்டவர்க்குப்புனலூறுமாபோற்
களிக்குந்திருக்கூத்துக்கண்டவர்க்கெல்லா
மளிக்குமருட்கண்ணீர்சோர்நெஞ்சுருக்கு
மொளிக்குளானந்தத்தமுதூறுமுள்ளத்தே.

—திருமந்திரம்.

நேடிதுபோதுயிர்த்துநின்றுநிறைந்தெழுமயிர்க்காரூறும்
வடிவேலாம்புளகம்பொங்கமலர்க்கணீரருவிபாய
வடியனேற்கிவர்தாமிங்கேயகப்பட்டாரச்சோவென்று
படியிலாப்பரிவுதானேர்படிவமாம்பரிசுதான்ற.
போற்றிமெய்யருட்டிறம்பெறுபரிவுடன்வணங்கி
நீற்றின்மேனியினிறைமயிர்ப்புளகங்கணேருங்கக்
கூற்றடர்த்தவர்கோயிலின்புறம்புபோற்தருளி
யாற்றுமின்னருள்வணிகர்மேற்செலவருள்செய்வார்.
பரிவுமானந்தநிறைந்ததுளிகண்பனிப்ப
விரவுமயிர்ப்புளகங்கண்மிசைவிளங்கப்புறத்தணைவுற்
றாவுநெடுந்திசைவேலையணிவான்மியூதனுட்
சிரபுரத்துப்புரவலனுர்சிலநாளங்கினிதமர்ந்தார்.

வீழ்ந்துபோற்றிப்பரவசமாய்விம்மியேழுந்துமெய்யன்பால்
வாழ்ந்தகிங்கையுடன்பாடிமாமுவிருப்பிற்புறம்போந்து
சூழ்ந்சதொண்டருடன்மருவுநாளிற்முல்லைக்கச்சிநகர்த்
தாழ்ந்தசடையாரால்யங்கள்பலவுஞ்சார்ந்துவணங்குவார்.
பூதமுதல்வர்புற்றிடங்கொண்டிருந்தபுனிதர்வன்முண்டர்
காதல்புரிவேதனைக்கிரங்கிக்கருணைத்திருநோக்களித்தருளிச்
சீதமலர்க்கண்கொடுத்தருளச்செவ்வேவிழித்துமுகமலர்ந்து
பாதமலர்கண்மேற்பணிந்துவீழ்ந்தாருள்ளம்பரவசமாய்.

—பெரியபுராணம்.

திண்டாடிவீழ்கைசிவானந்தமாவது
வுண்டார்க்குணர்வுண்டாமுன்மத்தஞ்சித்திக்குங்
கொண்டாடுமன்றட்குளிக்குந்திருக்கூத்துக்
கண்டார்வருங்குணங்கெட்டார்க்குமொக்குமே.

—திருமந்திரம்.

சிவபோகச்செல்வர்க்கு முடிவிலாவானந்த சிவமே யாண்டும் தோற்றுதல்.

யொ வை ஹ்ரீமா தத்ஸுகம் ஹ்ரீவை ஸுகமஸ்தி நாந்யே ஸுகமஸ்தி பூமைவ ஸுகம் பூமா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி பூமானம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி.

யோ வை பூமா தத்ஸுகம் நால்பே ஸுகமஸ்தி பூமைவ ஸுகம் பூமா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி பூமானம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி.

"எது முடிவிலா ஆனந்தமோ (பூமாவோ) அது இன்பம்; அற்பத்திலே இன்பம் இல்லை; பூமாவே இன்பம்; (முடிவிலா ஆனந்தமாகிய) பூமாவே அறியற்பாற்று; பகவானே! முடிவிலா ஆனந்தத்தை அறியவிரும்புகின்றேன்" என்றும்,

யத்ர நான்யத்பஸ்யதி நான்யச் ச்ருணோதி நான்யத்விஜா நாதி ஸ பூமா.

யத்ர நான்யத்பஸ்யதி நான்யச் ச்ருணோதி நான்யத்விஜா நாதி ஸ பூமா.

"எங்கே மற்றொன்றும் காண்கிலனே, மற்றொன்றும் கேட்கிலனே, மற்றொன்றும் அறிகிலனே, அது பூமா" என்றுஞ் சாந்தோக்கியோபநிடதமும்,

ஹரிஓய வஷட்ஜகுலாநாமஹ்ருதயாய நமஃ।
ஹார்த்தாய ஸர்வஜந்தூநாம் துப்யம் பூமாய தே நமஃ।

"சமஸ்த செந்துக்களின் இதயத்தின்கண்ணே வசிப்பவரும், முடிவிலா இன்பமுடையருமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று சம்பவகாண்டமும் கூறுமாற்றால், முடிவிறந்த சிவானந்தத்துள்ளே அமிழ்ந்திய சிவன்முக்தர் மற்றோர் அற்ப இன்பத்தை விரும்பி ரூபாதிவிஷயங்களைக் கண்டு பிரவர்த்தித்துப் பிராரத்தவாதீனயிற் படுவாரல்லராய், எவ்விடத்தும் சிவத்தோற்றம் ஒன்றையே காணப் பெறுவர்.

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனுய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே.

—திருவாசகம்.

தோண்டர்மனம்பிரியாததிருப்படியைத்தொழுதிறைஞ்சி
மண்டுபெருங்காதலினுனைக்கிமுகமலர்ந்தெழுவா
ரண்டமெலாநிறைந்தெழுந்தவானந்தத்துள்ளலைந்து
கண்டபேரின்பத்தின்கரையில்லாரிலையணைந்தார்.

—பெரியபுராணம்.

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிராணநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே.

—ஞா, திருவாலவாய்.

குருகாம்வயிரமாங்கூறுகாளாங்
கொள்ளுங்கிழமையாங்கோளேதாளும்
பருகாவமுதமாம்பாலினெய்யாம்
பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணு
மொருகாலுமையாளோர்பாகனுமா
முண்ணின்றநாவிற்குரையாடியாங்
கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே.

—நா, திருக்கருகாவூர்.

ஊனுகியுயிராகியதனுணின்ற
வுணர்வாகிப்பிறவீனத்துன்றீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்து
நல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனூருங்கொன்றையனேநின்றியூராய்
திருவாரூனக்காவிலுறைசிவனேஞான
மானுயுன்பொற்பாதமடையப்பெற்று
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே.

—நா, திருவாரூனக்கா.

ஊனுயுயிராணுயுடலாணுயுலகாணுய்
வாணுய்நிலணுணுய்கடலாணுய்மலையாணுய்
தேனுர்பெண்ணேத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாணுயுனக்காளாயினியல்லேனெனலாமே.

—சு, திருவெண்ணெய்நல்லூர்.

மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ள ஆன்மப்பிரமம் மாயா வாதோபநிடதப்பிரகாரம் சிவன் எனப்படுகின்றது; இந்தச் சிவனையுற்று ஏகான்மவாதவராகோபநிடதம் "சிவனே சகலமும், சிவனைக்காட்டிலும் வேறொன்றும் இல்லை" என்று கூறுகின்றது. இங்ஙனம் பௌதிகயோகத்துக்கும் வைதிகபசுபதயோகத்துக்கும் இடைக்கண்ணே மூலப்பிரகிருதிப்பாற்பட்டுள்ள நிர்க்குண சாங்கியயோக சிவனையுற்றுக் கூறினமை பொருத்தமேயாக, மூலப்பிரகிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள பரப்பிரகிருதி கடந்து, அப்பாற்பட்டுள்ள சைவசித்தாந்த சோருபசிவத்தையுற்றுப்போந்த மேலே கூறிய "குற்றமே குணங்களே" என்றற்றொடக்கத்த திருவருட்பாக்களைத் தமது கீழ்நிலைக்கண்ணதாகிய பசுப்பிரமமாகிய சிவனுக்கேற்றி ஏகான்மவாதிகள் தலைதடுமாறிநிற்கின்றார்கள். இது வயிரக்கல்லுக்கு ஏற்றப்படும் உயர்ந்த விலையை அற்ப விலையுடைய ஸ்படிகக்கற்கு ஏற்றினமை போலவும், சிரேஷ்டமாகிய குதிரைக்குக் கூறப்பட்ட உயர்ந்த விலையைக் கோவேறுவேசரிக்கு ஏற்றினமைபோலவுமன்றோ முடிகின்றது. "அரக்கர் சேனை நீறுபட்டழிய" என்ற செய்புட்பாகத்தைக் கண்டவுடனே ஒருவர் விபூதிமான்மிய உபநிடதப்பிரமாணங்களோடு இந்தக்

கம்பராமாயணச் செய்யுளையும் திருவுணர்ச்சிகொண்டு சேர்த்து எழுதினமைபோல, தேவாரதிருவாசகமுதலியவற்றிலே "ஊனு யுயிராளுய்" "வானுகிமண்ணுகி" என்றற்றொடக்கத்த அருட்பாக் களைக் கண்டவுடனே, தங்கள் ஏகான்மவாதத்துக்குரிய நிர்க் குணப்பிரமசிவனை உணர்த்தும் ஏகான்மவாதச்செய்யுட்களோடு அத்திருவருட்பாச்செய்யுட்களையுஞ் சேர்த்து எழுதிச் சைவசித் தாந்தத்தையும் மாயாவாதத்தையும் ஒன்றுகக் கலக்கிக் குழறு படை செய்வதையுற்றுச் சைவநேயர்கள் விழிப்பாயிருப்பார்க ளாக.

ஹிவியாதாவிஹஸவொ வஸகாஞ்தெள ஸிவஃ ஸ்ம்ருதஃ।
வண்வ்யத்யயதஸ்வித்தெள வஸ்யகஃ கஸ்யபோ யதா॥

ஹிவிதாதேதாஸ் விம்ஹஸப்தோ வஸகாந்தெள ஸிவஃ ஸ்ம்ருதஃ।
வர்ணவ்யத்யயதஸ் வித்தெள பஸ்யகஃ கஸ்யபோ யதா॥

"பச்யக என்பதினுற் கச்யப என்னும் பதமும், ஹிம்சித்தல் எனப்பொருள்படும் ஹிசி தாதுவினின்று சிம்மசப்தமும் வர்ண வியத்யயத்தினுல் எய்தினுற் போல, அன்புறுதல் எனப் பொருள் படும் வச என்னும் பகுதியினின்று சிவ என்னும் சப்தமும் எய்தி யது" ஆகலின், சிவம் என்னும் மொழி அன்பு எனப் பொருள் படும்.

அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயச்சரியை, உபாயக்கி ரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் என்னும் பதின்வகைச் சிவபுண்ணியங்களுள்ளே, ஒன்றுகிய உண்மைஞானமானது "(சிவ ஞானபோதவசனலங்காரதீப"த்தின் உ, ரு, சூ, ஏ, அ, கூ, க0, கக–ம் சூத்திரங்களின் கீழே உணர்த்தப்பட்டவாறு) தத்துவரூபமுதற் சிவபோகம் இறுதியாகப் பத்துவகைப்படும். படவே, துரியா தீதத்துச் சிவபோகம் சிவபுண்ணியமேயாம். இச்சிவபுண்ணிய சிவபோகம் சிவமாகிய அன்புநிலையேயாம். அது

இன்பி னினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா
மன்பு நிலையே யது.

—திருவருட்பயன்.

முன்பு ஈட்டிய தவத்தின் முதிர்ச்சியினுல் ஒருவர்க்கு அன்பு என்பது இப்பொழுது உளதாயின், எல்லா இன்பங்களினும் இனி மையுடைத்தென்று சிறப்பித்துப் புகழப்படும் பேரின்பசிவபோ கம் இப்பொழுதே உளதாம்; அது மிகுந்த அன்பினது நிலை யையே தனக்கு நிலையாகவுடையதாகலான் என்பது.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப தறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

—திருமந்திரம்.

சிவபோகத்தை எய்துதற்கு உரிய நெறிகள் சன்மார்க்க முறை அன்புநெறி என இரண்டு உளவாம்.

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதிலைஞ்—தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதனுஞ் செய்.

—திருக்களிற்றுப்படியார்.

பரம்பொருளை ஏகதேசப்படுத்திச் சகமார்க்கத்திலுல் அகத்தே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் தியானிப்பதும், தாதமார்க்கம்போற் புறத்தே தியானிப்பது மொழிந்து பூரணநிலையை அறிந்து வழிபடின், உன் அறிவிலே காருண்ணியத்திலுடும் சிவம் பிரகாசிக்கும்; சகமார்க்க புத்திர மார்க்க தாதமார்க்கத் தியான நினைப்பு ஒழியுமாறு, குருவருள் பெற்று மெய்யுணர்தலிற் றலைப்பட்டுச் சன்மார்க்கமுறையிலுழுகுதி; அங்ஙனமின்றி அன்பு செய்ய வருமாகின் முதல்வனிடத்து அன்பு செய்து சிவத்திடைச் செறிந்து நிற்குதி; இவ்விரண்டனுள் இயன்றதொன்றைச் செய்குதி என்றது திருக்களிற்றுப் படியார் என்னும் சித்தாந்தசாஸ்திரம்.

அன்புநெறி.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேபயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்மே றான்.

—திருக்களிற்றுப்படியார்.

இங்கே "அறிவழியும் அன்பு" என்றது ஞானக்கிரியைகள் இழந்தவிடத்துளதாம் அன்பின் மேலதாயிற்று. மேலும், திருக்களிற்றுப்படியாரில் "அவிழ்ந்தணியில்" "சுரந்தகிருமுலைக்கே" என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களிலே போந்த அவிழ்ந்த மனம் தாழ்ந்தமனம் என்பனவும் செயலிழந்த அன்பினை உணர்த்தியவாம்.

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கிறையேவந்துசார்மின்களே.

—ஞா, திருப்பாசுரம்.

மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றுமென்ப
தாதிச்சுடர்ச்சோதியையன்பினகத்துள்ளாக்கிப்
போதித்தநோக்குற்றுழியாமற்பொருந்திவாழ்ந்து
பேதித்தபந்தப்பிறப்பின்னெறிபேர்மினென்னும்.

—பெரியபுராணம்.

ஆர்வல்லார்காணவரனவனையன்பென்னும்
போர்வையதனுலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தாலுழுந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தீதாமறைத்து.

—காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

பத்திவலையிற்படுவோன்காண்க.

—திருவாசகம்.

முன்படைத்தின்பம்படைத்தமுதலிடை
யன்படைத்தேம்பெருமானையறிகிலார்
வன்படைத்திங்கவகலிடவாழ்வினி
லன்படைத்தான்றனகலிடந்தானே.

அன்பினுள்ளான்புறத்தாணுடலாயுளான்
முன்பினுள்ளான்முனிவர்க்கும்பிரானவ
னன்பினுள்ளாகியமருமும்போரு
வன்பினுள்ளாய்த்தீகயிணதுணையாதிமை.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தோடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.

ஒத்துல கேழு மறியா வொருவனென்
றத்த னிருந்திட மாறறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படி னல்லது
முத்தீ னயார்சொல்ல முந்துகின் றூரே.

கண்டறி வாரில்லை கர்யத்தி னந்தியை
யெண்டிசை யோரு மிறைவனென் றேத்துவ
ரண்டங் கடந்த வளவிலா வானந்தத்
தோண்டர் முகந்த துறையறி யோமே.

—திருமந்திரம்.

பொருப்பினில் வந்தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மே
லருப்புறுமென் மலர்முன்னீ யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

உருகியவன் பொழிவின்றி நிறைந்தவ னுருவென்னும்
பெருகியகோள் கலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலா
லொருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதற்றீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம்.

நண்ணிமா மறைக்குலங்க ணுடவென்று நீடுமத்
தண்ணிலா வரும்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையொன்று கொண்கோணு மன்பர்முன்
னெண்ணில்பார்வை கொண்டுவேட செம்மருங்கு மேகினூர்.

உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை யுருவினையு
மவ்வன்பின் னுள்ளே மன்னும், வெள்ளைச்சேஞ் சடைக்கற்றை
நேற்றிச் சேங்கண் விமலரையு முடன்கண்ட விருப்பும் பொங்கிப்,
பள்ளத்தி லிழிபுனல்போற் பரந்து செல்லப் பைம்பொன்மலி வல்
லிபரிந் தளித்த செம்பொன், வள்ளத்தில் ஞானவா ரமுது முண்
டார் மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றூர்.

—பெரியபுராணம்.

"முன்பு செய்தவத்தினீட்ட முடிவிலாவின்பமான வன்பினை யெடுத்துக்காட்ட" என்று கூறப்படலான், முன்னர் ஈட்டிய பெரும் தவமே முடிவிலா இன்ப அன்புக்குக் காரணமாகின்றது. அறிவு செயல் இழந்த விடத்துளதாம் அன்புப்போர்வைகொண்டேனும், அன்புவலைகொண்டேனும், அன்புநாழிகொண்டேனும் சிவானந்த மகோததியிலே படிந்து, போர்த்து, முகந்து நீடித்து நிற்றற்கு நீடித்த அன்பு வேண்டும். சிவபுண்ணியமுதிர்ச்சியின் றேல், அன்பினகத்துட்கொண்டு சிவத்தை நீடித்துப் பார்த்தல் கூடாதாகி முடிந்துவிடும். சிவதீக்ஷையின்றி அறுபத்துமூன்று நாயன்மார் அன்பினுற் சிவத்தை அகத்துள் அடக்கிநின்றார்களே, நாமும் அங்ஙனம் தீக்ஷையின்றிச் சிவத்தை அடைந்துவிடலாமே எனின், கூறுதும்: கண்ணப்பநாயனார் காளத்தியப்பரை ஆறு நாளும் இடையே வற்றி அற்றுப்போகாத நெடுகிய அன்பினல் நீண்டபார்வைகொண்டு பார்த்து முத்தியடைந்தாரன்றே, அங்ஙனம் மற்றைய அடியார்களும் சாயாத அன்பினுற் சிவத்தை உணர்ந்திருந்தார்கள். சிவபுண்ணியமிலாமையால் நீடித்துச் சிவத்தை நோக்கவியலாத நாம் அறுபத்துமூன்றுநாயனார்போலப் பக்தியை அநுசரித்துச் சிவதீக்ஷையின்றி வாழுவோம் எனல் நாடகமாத்திரையேயாம். இடையீடின்றி முறுகி ஓங்கிய அன்புக் குருமணிகளாகிய அறுபத்துமும்மை நாயன்மார்களுள்ளே, திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை ஞானப்பால்கொண்டும், திருநாவுக்கரசுநாயனரைச் சூலைநோய்கொண்டும், சுந்தரமூர்த்திநாயனரை அடிமையோலைகொண்டும், கண்ணப்பநாயனரைச் சாட்சுவதீக்ஷைகொண்டும், அமர்நீதிநாயனரைக் கௌபீனங்கொண்டும், திருநீலகண்டநாயனரை ஓடுகொண்டும், காரைக்காலம்மையாரை மாம்பழங்கொண்டும் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும்மூர்த்திமாண்புங் கேட்பான் புகிலளவில்லை" என்னும் திருப்பாசுரப் பிரகாரம், சிவபெருமான் வேதாகமங்களின் விதிகடந்து தீக்ஷைசெய்து அடிமைகொண்டார். அவற்றையெல்லாம் சிற்றறிவினேமாகிய யாம் அளவிட்டு இன்னருக்கு இன்ன தீக்ஷை செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லவல்லேம். ஆகலின்; தீக்ஷையின்றியமையாததீதையாம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியாஞ்சிலேற்குத்
திறைகொணர்ந்திண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
யறைகழலிறைஞ்சுமாரூரப்பனையஞ்சினேனே.

—சு, திருவாரூர்.

வேதாகம இதிகாசபுராணப்பொருள்களை அடக்கிய திராவிட வேதமாகிய தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளிலே புகழப் பட்ட சிவபெருமானது பெருமையைச் சிந்தித்து உணர்ந்து, சிவத் தோடு ஆன்மாவானது அத்துவிதமாய் இசைந்த இன்பமே இன் பத்தோடிசைந்த வாழ்வாகும் என்றுண்மை கடைப்பிடித்து உய் தல் சிவநேசச் செல்வர் யாவர்க்கும் கடமையாம்.

தேவாரம் வேதசாரம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கஉ	உசு	பட்டது	பட்டவர்
கசு	ங	சிவப்பிர	சுவப்பிர
,,	எ	வெளி	வளி
கநி	உ	பெமான்	பெருமான்
கசு	கஅ	போதை	பேதை
உ0	கூ	மஹுதி	மஹுதி
உஅ	உஉ	வஹஒநரம	வஹஒநாம
உசு	எ	ஹாசு	ஹாக்
ஙஉ	ச	ச்எ	ச
சுக	கஉ	ஹ்ரஸ	ஹ்ரஸ
சுங	உச	வர்மா	வர்ணமா
கசு	அ	படாத	படாதது
கஉக	எ	பிலா	பில்லா
கநிச	கஉ	நிதட	நிடத
,,	உநி	ஹ்ரிதி	ஹ்ரிதி
கநிஎ	ககூ,உ0	ஹரிகெஸ ஹெஹாநஙி	நமோஹரிகெஸாயொவவீதி
		ஹரிகேஸேப்யோ நமஃ	நமோஹரிகேஸாயோபவீதிநே
கநிஅ	சு	ஙஹா	ஹங
கநிகூ	க0	ஸ்வா ஃ	ஸ்வா ஃ

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கஎஉ	கஅ	ணாஃ	ணாழ்
கஅங	தசு	ஸ்ரீ தி ஸ்ரீ	ஸ்ரீ தி ஸ்ரீ
கஅச	ஈக	நஷ்ரா	திஷ்ரா
உ00	கஅ	3ரோ	3நோ
உகஉ	கங	ஞன்கா	ஞன்காண்
உகடு	ககூ	நி. அஅ	நி. அ. அ
உஉசு	உசூ	நரத்மா	நாத்மா
உஉசூ	உஉ	மெருமா	பெருமா
உசள	கக	ஹாஜி	ஹாஜி
உடுஎ	கச	ஸவா	ஸவ்வா
உடுஅ	கஅ	ஷெஹ்ரஸ்ஃ	ஷெஹ்ரஸ்ஃ
உசுஅ	நு	ஹமநு)	ஹமவநு)
,,	எ	ஹவகூ	ஹவகூ
உஎக	உஉ	3ஐநு)ం	3ஐநநு)ం
உஅ0	நு	வாஹர	வாஹ
,,	ஙக	நுகி	நுாகி
உஅசூ	உ	தக்ஷ்	தக்ஷ்
,,	ச	தைம்பார்த்தற்ரு	தைப்பார்த்தற்கு
உசூஉ	க0	வேனு	வேணு
ங0சு	க	கంயநு	கంயரு
,,	கஎ	நிமாநி	நீமாநீ
ஙக0	ஙங	வரன்	வர
ஙகங	உஎ	உன்னில்	உன்னிலுன்னும்
ஙங்அ	உசூ	கபப்	சுப்ப
ஙசநி	ஙசு	யாரோடு	யாரொடு
ஙசசூ	கஉ	ஹஹநு	ஹுக்ஷ்ணை
ஙநிச	ஙo,ஙக	இதனுற் [தகரபு ணடரீகத்தின் பால தாகிய] பிரமாண்ட மாகிய சரீரத்திலே உள்ள	இதனற்பிரமாண் டமாகிய சரீரத்தி லே உள்ள தகரபு ண்டரீகத்தின் பால தாகிய
ஙநிடு	சூ	மமப	மம்ப
ஙசுஎ	ஙசு	பாலதாய்	பாலனவாய்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ஈகூஅ	உள	ரூதிரு	நரூதிரு
ஈஎசூ	உஈ	புபநம	புவநம்
ஈளஎ	கசூ	திஷ	தெஷ
ஈஎஅ	கச	புகழ்ச்சார்பாகி	புகழ்ச்சார்பாகிய
,,	கக	கண்ணு	கண்ணு
ஈஎகூ	சூ	கழற்	கழல்
ஈகூசூ	கஈ	பசுப	பாசுப

விக்கிரயபுத்தகம்.

		ரூ.	அ.
1.	நீலகண்டபாஷ்யத்தமிழ்மொழிபெயர்ப்பு	6	0
2.	வைதிகசுத்தாத்துவிதசைவ சித்தாந்ததத்துவப்படம்	3	0
3.	ஷை விஞ்ஞிடை	1	0
4.	வச்சிரதண்டமுந்தாந்திரிகதுண்டகண்டனகண்டனமும்	0	8
5.	மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம் ஏகான்மவாதகண்டனம் பற்றியது.	0	8
6.	ஸ்ரீசிகாழிப்பெருவாழ்வின் சிவகாருண்ணியமாட்சி	0	4

(தபாற்சார்ஜ்வேறு.)

இங்ஙனம்

சி. சிவசம்புநாதையர்

திருப்பரங்குன்றம், மதுரை.

		ரூ.	அ.
1.	சிவஞானபோதவசனாலங்காரதீபம்	2	8
2.	தேவாரம்வேதசாரம்	3	0
3.	சிவலிங்கமகத்துவம்	0	4
4.	திருநீற்றின்உண்மை	0	4

விலாசம்:—

சி. சு. ஏகாம்பரமுதலியார்

24 சாமிபண்டாரம் தெரு

ஜார்ஜ்டௌன் சென்னை.